[illegible]

[illegible]

[illegible] 1935

[illegible] N28

N35·8·3

187104

1862

1862

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 8—No. 3.

OFFICE OF ... 27 MAR 1935

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாநம் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | பவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1935 ௵ மார்ச்சு௴ | இதழ் ௩ |
|---|---|---|

உள்ளுறை பக்கம்

கள்வீரே! உமகாதலே! ... ... ௧௧௫
மற்று ஈண்டு வாரா நெறி ... ... ௧௧௮
சைவர்கட்குத் திருமுகம் ... ... ௧௩௧
திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்களிலும் செப்பேடு
களிலும் கண்ட உயரிய செய்திகள் ... ௧௩௯
ஆலமுண்ட நீலகண்டன் ... ... ௧௪௭
சமாஜ 29-ம் ஆண்டு விழாக் கணக்கு ... ... ௧௫௦
சமாஜ வரவேற்புத் தலைவர் (உருவப் படம்) ... ௧௫௧
மெய்கண்டார் சந்நிதி (படம்) ... ... ௧௫௨
தூத்துக்குடித் தலைமைப் பேருரை ... ௧௫௫
சித்தாந்த சாத்திரம் ... ௧௬௫ - ௨௦௮

ஆசிரியர்:—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர்:—அ. சிதம்பரநாத செட்டியார், B. A., L. T.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

## மதிப்புரை

**திருவேங்கட மும்மணிக் கோவை** ஆசிரியர் - கவிராஜ பண்டிதர் ஆந்திரக் காசியபதிம்மப்ப அந்தணனார் - பக்கம் (20+xx) விலை அணா 4. இச்சிறு நூலுக்குப் பன்னிருவர் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளது இதன் சிறப்பைச் சிறப்பாக விளக்கும். முப்பது பாடல்களடங்கிய இம்மும்மணிக்கோவை பல நயங்களையும் நுட்பங்களையுமுடையது. இவ்வாசிரியர் பாடல்களை இயற்றுவதில் வல்லுநரென்பது தமிழ் நாடறிந்த தொன்று. புத்தகம் வேண்டுவோர் சேலம் முனிசிபல் காலேஜ் தமிழ் விரிவுரையாளருக் கெழுதிப் பெறுக.

## பிரிவாற்றாமை

நமது சமாஜ சைவத் தேர்வில் இளஞ்சைவப் புலவர் பட்டம் பெற்ற திரு. P. S. சுப்பிரமணிய உடையார் சிவபத மடைந்த செய்தியை மிக்க வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். அன்னார் ஆன்மா ஆண்டவன் திருவடியில் ஆறுதலடைவதாக.

## தஞ்சைச் சைவ சித்தாந்த சபையின் 5-ம் ஆண்டு விழா

நமது சமாஜத்தோடு இணைக்கப் பெற்ற இச்சபையின் ஐந்தாம் ஆண்டு விழா (24-2-35) ஞாயிற்றுக்கிழமை உயர் திரு வாலையாநந்த சுவாமிகள் என்னும் சச்சிதாநந்த சுவாமி அவர்கள் சீரிய தலைமையிற் றொடங்கிற்று. தலைவரவர்கள் முன்னுரையாகச் சைவ சமயம் இன்னதென்பதையும், அதன் உயரிய கருத்துக்களையும், அதன் பரந்த நோக்கத்தையும், சைவ சமயிகள் நடந்து கொள்ள வேண்டிய விதிகளையும் மிகத் தெளிவாகக் கூறினார்கள். அதன் பின்னர் திருவாளர்கள் முத்துக்கிருஷ்ண பிள்ளை, வித்வான் மறை திருநாவுக்கரசு, அ. மு. சரவண முதலியார், தஞ்சைச் சைவசித்தாந்த இளைஞர் சங்க உறுப்பினர்களாகிய சேஷாத்திரி, இராமையன் என்ற இளைஞர்கள், பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் முறையே தில்லை வெளி, கடவுளைக் கண்ட கருணையாளர், இயற்பகை ஏற்றமும் இறைவன் தோற்றமும், ஆத்திக நாத்திக அளவளாவல், விலாவிறச் சிரித்திட்டேன் என்பவை பொருளாகக் கேட்போர் வியக்குமாறு விரிவுரை யாற்றினார்கள். பின்னர் தலைவரவர்களால் முடிவுரை கூறப்பெற்றது. நன்றி கூறுதலுடன் சபை இனிது நிறைவெய்தியது.

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"


| மலர் ௮ | பவ ஆண்டு பங்குனித் திங்கள் 1935௵ மார்ச்சு௴ | இதழ் ௫ |
|---|---|---|


## கள்வீரே! உமகர்தலே

[பத்திராசிரியர்]

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்" என்பது தமிழ் மறை. நற்றாள் தொழுதல் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் செய்தற்குரிய தொழில். மனத்தினால் இறைவன் தாளைத் தொழுதலுள் மானஸீக பூசை, அருவ வழிபாடு, இறைவன் அருட்டிறத்தை இடைவிடாது சிந்தித்தல், இறைவன் புகழ் கூறும் பன்னிரு திருமுறை போன்ற அருட்டிருவாக்குக்களை அருட்டுணை கொண்டு சிந்தித்தல், அவைகட்கு உரை கண்டு தெளிதல் முதலியன அடங்கும். இவற்றுள் மிகச் சிறந்ததும் இக்கால நிலைக்குப் பெரிதும் வேண்டப்படுவதுமாக வுள்ளது தேவாரத்திற் பல பாசுரங்களிற் பொதிந்துகிடக்கும் உண்மைகளை விளக்குவதே யாகும். இவ்வரும் பணியில் ஈடுபட்டு, நமது சமாஜத் தலைவருள் ஒருவராகிய சைவத் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், நமது பத்திரிகையில்

அ

உமாபதி சிவாசாரியார் திரட்டியருளிய நூறு தேவாரத்திருப் பாசுரங்கட்கு விரிவான உரை வகுத்ததுமன்றி, "செந் தமிழ்ச் செல்வி"யிலும் பல ஆண்டுகளாகத் தேவாரப் பாசு ரங்கட்கு உரையெழுதி வெளியிட்டுச் சைவம் வளர்த்தல் தமிழ் நாடறிந்த தொன்று. சென்றடையாத திருவுடை யான், கோளறு பதிகத்தில் ஒரு தொடர் முதலியவைகட்கு நமது பத்திரிகையில் அவ்வப்போது பல அன்பர்கள் உரை காண முயற்சி செய்ததும் நண்பர் பலர்க்கு ஞாபகமிருக்கும். இப்போது அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டிருக் கிறது.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண் பனையாக்கிய காலத்துத் திரு வாய் மலர்ந்தருளிய "பூத்தேர்ந்தாயன" என்று தொடங்கும் பதிகத்து மூன்றும் பாசுரத்தின் கருத்து யாதென்பதை யறி யத் தமிழறிஞர் குழுவில் ஒரு முயற்சி நிகழ்கின்றது. அப் பாசுரம் கீழ்வருமாறு:—

" உள்வேர்போல நோடிமை யினார்திறம்
கோள்வீர் அல்குலோர் கோவணம்
ஒள்வாழைக்கனி தேன்சோரி ஒத்தூர்க்
கள்வீரே! உம காதலே "

இப்பாசுரத்துக்குக் கீழ்வரும் உரைகள் இதுகாறும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை முதலிற் கூறிப் பிறகு எமக்குத் தோன்றும் கருத்துக்கள் சிலவற்றையும் தெரிவிப் பேம்.

(1) ஒருசிலர் இப்பாசுரத்து முதலிரண்டடிகளை "நொடி மையினார் திறம், உள்வேர்போல(ச் சென்று), அல்குலுக்(கு) ஓர் கோவணம் கொள்வீர்" என்று உரைநடைசெய்து "கொடுக்கும் தன்மை[illegible]த்தில் வேடதாரிபோலச் சென்று அரைக்கு ஒரு கோவணம் பெறுவீர்" என உரைப் பர். இவர் உள்வரியென்பது உள்வேர் என மரீஇற்றென் றும், நொடிமையென்பதற்குக் கொடுக்குந்தன்மையென்பது பொருளென்றும் கூறுவர்.

(2) மற்றொருசாரார் "நொடிமையினார் திறம் உள்வேர் போல அல்கு(ற்கு) ஓர் கோவணம் கொள்வீர்" என்று உரை நடை செய்து, "இனிய சொற்களைப் பேசுந் தன்மையினை யுடைய மகளிரிடம் உட்செல்லும் வேர்போலும் கோவணம் ஒன்று அரையிற் கொண்டு செல்வீர்" என்றுரைப்பர்.

(3) வேறு சிலர் "நொடிமை யினார்திறம் சென்று மண் ணின் உட்பகுதியைக் கொள்ளும் வேர்போல ஓர் கோவணம் இரந்துபெற்று அல்குலின்கட் கொள்வீர்" என உரைப்பர்.

(4) வேறொருவர் இப்பாசுரத்துக்கு "ஒள்வாழைக் கனி தேன்சொரி ஒத்தூர்க் கள்வீரே, நொடிமையினார்திறம் ஓர் கோவணம் அல்கு(லிற்) கொள்வீர் உள்வேர்போல, (இவை) உமகாதலே" என்று உரைநடை செய்து "ஒள்ளிய வாழைப் பழங்கள் தேனைச் சொரியும் திருவோத்தூரின்கண் எழுந் தருளிய கள்ளத் தன்மையினையுடைய பரமனே! பலிபெறு தற்குரிய தன்மையுடையவரிடத்தே(=நொடிமையினார்திறம்) ஒரு கோவணத்தை அரையிலணிந்து மண்ணுட் சென்று ஊடுருவும் வேர்போலச் சென்று பலி பெறுவீர். இதுவும் மேற்கூறியனவுமாகிய இவை உம்முடைய காதற் செய்கை களேயாம்" என்று உரை வகுத்துள்ளார்.

மேற் கூறியவைகளெல்லாம் திருவோத்தூர் வாகீச பக்தஜன சபையினரால் வெளியிடப்பெற்ற அத்தலத் தேவாரப் பதிகவுரை நூலிற் கண்டனவேயாம். அந்நூலி லேயே அன்பர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தல் வேண்டுமென்றொரு வேண்டுகோளும் வெளியிடப்பட்டுள் ளது. இதற்கிணங்க இக்கட்டுரையைக் காணும் அன்பர்களும்

187/09

தங்கள் கருத்துக்களை மிகச்சுருக்கமாக எழுதியனுப்பவேண்டு கிறோம். அவற்றுள் உண்மை காண்பதற்கு உதவி புரியக் கூடியவைகளை நமது பத்திரிகையில் வெளியிடுவோம். உண்மை காணத் துணைபுரிதல் வேண்டுமென்ற நோக்கங்கொண்டே நாமும் சில கருத்துக்களைக் கீழ்வருமாறு தெரிவிக்கிறோம்.

இப்பாசுரத்துக்கு உரைநடையாவது "ஒள்வாழைக் கனி தேன்சொரி ஓத்தூர்க் கள்வீரே! கொடிமையினார்திறம் அல்குலோர் கோவணம் உள்வேர்போலக் கொள்வீர், உம காதலே!" என்பது. இதன்பொருள் "ஒளிமிக்க வாழைக்கனி தேன் சொரிகின்ற (வளம் பொருந்திய) திருஓத்தூரில் (கோயில்கொண்டுள்ள) கள்வரே! இனிய மொழி பகரும் உமாதேவியாருடைய பக்கலில் (இருந்துகொண்டே அவ்வம்மையார்மீது) உள்வெகுளி(கொண்டவர்)போல(ப் பாசாங்கு செய்து, அவ்வம்மையார் பக்கலில் அமர்ந்திருக்கும் அமைப்புக்கேற்ற போகவேடங் கொள்ளாது யோக வேடத்தைக் குறிக்கும்) ஒரு கோவணத்தை அரையிற் கொண்டுள்ளீர்! உமது (உண்மையான) காதல் எத்தன்மை யானது!" என்பதாம்.

குறிப்புரை:—உள்வேர் - உள்வெகுளி. வேர் என்ற சொல் வெகுளி என்ற பொருளில் வருதலைத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்துள் திருப்புகலி - பண் - காந்தார பஞ்சமம், எ-வது பாசுரத்தில் "சேர்ப்பது திண்சிலை மேவினுனுந் திகழ்பாலன் மேல் வேர்ப்பது செய்த வெங்கூற்றுதைத்தானும்" என்ற விடத்தும், திருக்குறள் 487-ம் செய்யுளில் "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம் பார்த்துள் வேர்ப்பர் ஒள்ளியவர்" என்ற விடத்தும், இதற்குப் பரிமேலழகர் உரை கூறிய விடத்தும் கண்டு கொள்க. முற்கூறிய வேறு பல உரைகள் வெகுளியெனக் கொள்ளாது மரத்தின் வேர் எனக் கொண்டு இடர்ப்படுதலை நோக்குக.



(உள்வேர்) போல என்பதனுல் உண்மையில் உள்வெகுளி யில்லை யென்பதாயிற்று. நொடிமையினார் திறம் அமர்ந்திருத்தலால் புறவெகுளியு மில்லை. ஏனெனில் புறவெகுளி யுண்டேல் அவ்வாறு அமர்தல் இயல்பாகாது. ஒள்வாழைக்கனி தேன்சொரிதலால் உள்வெகுளி உண்மையில்லை. ஏனெனில் சத்தியும் சிவமும் வெகுண்டால் (பிரிந்தால்) உலக இன்ப நுகர்ச்சியும் இயற்கைப் பொருளின் இன்ப நுகர்ச்சியாகிய வாழைக்கனி முற்றித் தேன் சொரிதல் முதலிய நிகழ்ச்சிகளும் இல்லாமற் போகும்.

இனிய மொழி பகரும் அம்மையார் பக்கத் திருந்தும், வெகுளி இல்வழியும் யோகக்கோலங் கொண்டமையால் கள்வீர் என விளிக்கப்பட்டார்; அவர் காதலும் வியத்தற்குரிய காதலாயிற்று.

இரண்டாம் பாசுரத்தில் இடையிர் போகா இளமுலையாளையோர் பாகமுடையார் புள்ளி மானுரியும் சடையும் (ஆகிய தவக்கோலம்) கொண்டமை குறிப்பாகக் கூறப்பட்டது. இப்பாசுரத்தில் அத்தகைய தவக்கோலங் கொண்டது திருவிளையாடலே யன்றி உள்வெகுளி, காதலின்மை முதலியவற்றை யுணர்த்தாதென்பது நிந்தாஸ்துதி முறையில் அழகாக விளக்கப்பட்டது.

இப்பாசுரத்தின் கருத்து திருநல்லூர்ப் பெருமணத் திருப்பதிகத்து ஏழாம் பாசுரமாகிய,

"மேகத்த கண்டன் எண்தோளன் வெண்ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல
போகத்தன் யோகத்தையே புரிந்தானே."

என்ற பாடலின் கருத்தோடும், திருவிசைப்பாவிலுள்ள

"மங்கையோ டிருந்தே யோகு செய்வானை
வளரிளந் திங்களை முடிமேல்
கங்கை யோடணியும் கடவுளைக் கங்கை கொண்ட
சோளேச் சரத்தானை
அங்கை யோடேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்த சொன்மாலை யாலாழிச்
செங்கை யோடுலகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதும் சிவன் அருட்கடலே."

என்ற பாடலின் கருத்தோடும் ஒப்பிட்டு மகிழற்பாலது.

இவ்வுரையில் இப்பாசுரத்து நான்கு அடிகளிலுமுள்ள சொற்கள், சொற்றொடர்கள், நுட்பங்கள் முதலியன இயல்பாகப் பொருந்தியுள்ளமை குறிக்கத்தக்கது. போல, கள்வீர், காதலே என்ற சொற்களிற் பொதிந்து கிடக்கும் நுட்பம் இயல்பாகப் பொருந்தாமையும், மூன்றும் அடி இயற்கை வருணனையாகமட்டும் நிற்கும் தன்மையும் மேற்கூறிய மற்ற உரைகளிற் காணப்படுகின்றன.

இதைக் கண்ணுறும் அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து உண்மை காணத் துணைபுரிவார்களாக. ஒத்தூர்க்கள்வீரே! உமகாதலே காதல்!

# மற்று ஈண்டு வாரா நெறி

## திருப்பாதிரிப்புலியூர்
## ஸ்ரீலஸ்ரீ - ஞானியார் சுவாமிகள் சொற்பொழிவு

[திரு. R. சண்முகசுந்தர செட்டியார் குறிப்பு]

சென்னையில் (1—10—1934)-ல் நிகழ்ந்தது

உலகில் பிறந்த மானுடர் ஒவ்வொருவரும் துன்பமே அனுபவிக்கின்றோம் என்று கூறுகின்றனர். பிறவி வேண்டாமென்றுங் கருதுகின்றனர். எனவே, பிறவி வாராதிருத்தற்



பொருட்டு நாம் நல்வழியிற் புகுந்து அதனைத் தடுக்க முயலுதல்வேண்டும். பிறவிக்குக் காரணம் யாதெனச் சற்று ஆராய்வோம். பிறப்பு யாவராலும் வெறுக்கத்தக்க இன்பம் இல்லாதது. மாட்சிமை இல்லாதது. அது மயக்கத்தால் வருவதே. பிறவியின்கண் துன்பமே, எந்நாளும் இன்பமேயில்லை. பசித் துன்பமும் நோய்த் துன்பமும் மிகுதியும் காணப்படுகின்றன. துன்பத்திலேயே இருக்க எவனும் விரும்பமாட்டான். ஆகவே அதனை ஒழித்தற்குச் சாதகம் என்னை? துக்கத்தை நினைந்து நினைந்து அதனிடத்து அஞ்சி, அஞ்சலென்று கூறும் இறைவனை உள்ளத்தால் உள்கி அவற்றினை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். 'அஞ்ஞானம் பிரபோ துக்கம்' என ஆகமம் கூறுகின்றது. துக்கம் அறியாமையால் நிகழ்வதாகும். அதனால் பிறவி நேர்கிறது. துக்கம் நீங்க அஞ்ஞானம் ஒழிதல் வேண்டும். அஞ்ஞானம் அறுமாயின் பிறவி ஒழியும். எனவே, பிறப்பென்பது பேதைமையாயிற்று. 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்றார் திருவள்ளுவர். அறியாமையே பிறப்பாகும். வீட்டுக்கு நிமித்தகாரணமாகிய செம்பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாகும். சிறப்பென்பது எல்லாப் பொருளினும் உயர்ந்தது. உலக வழக்கில் இரத்தினத்தை எல்லாப் பொருளினும் உயர்ந்ததென்று சொல்லுவதுபோல. இங்கு சிறந்த பொருள் செம்பொருளென்று கூறப்பட்டது. பொருள்களை மூன்றாகப் பகுக்கலாம். உலகம், உயிர், கடவுள் என மூன்று பிரிவுகளுண்டு. உலகமோ தோற்றக் கேடுகளுக்கு உட்பட்டது. உயிரோ நித்தமாயினும் தூயதாந் தன்மை இல்லாக் காரணத்தினால் சிறப்பாகமாட்டாது. கடவுளோ தோற்றக் கேடுகளில்லாது நித்தமாய் தூயதாய் தான் எல்லாவற்றிலும் கலந்து நின்று முதற்பொருளாய் விகாரமின்றி என்றும் ஒரு தன்மையா

யிருத்தல்பற்றிச் செம்பொருள் எனப் பெரியோர் கூறினர். இச் செம்பொருளைக் காண்பது மெய்யுணர்வாகும். காண்கின்ற செயல் பிறவியாகிய பேதைமையை நீக்கும். எனவே இறைவனை யடைந்தவன் பிறப்பினைப் போக்கிக் கொள்வான். பிறப்பை யறுத்தல் உயிர் தம்மால் முடியா. இறைவனால் தரவேண்டியதே. இப்பிறப்பை விடுதல் சிறப்பெனக் கொள்ளப்பட்டது. செம்பொருள் காரணமாக வருவது சிறப்பு. பேதைமை காரணமாக வருவது பிறப்பு. சிறப்பினை வீடு என்றுங் கூறுவர்.

நம்மவர் யாவரும் இரண்டு வீட்டின்கண்ணே குடிகொண்டிருக்கின்றோம். ஒன்று சரீரம்; மற்றது மண் மரம் முதலியவைகளால் கட்டப்பெற்றதான நாம் குடியிருக்கும் வீடுகள். பகல் முழுதும் வேலையில் அலைந்து உழன்று வீடு திரும்புவோர் தாம் பட்ட சிரமங்களைத் தணித்துக்கொள்ளுகின்றனர். உலக கஷ்டங்கள் போக்கப்படுவதாக முடிகின்றன. உடம்பாகிய வீடு இவைகளைப் போன்று சப்த தாதுக்களினாலே கட்டப்பட்டதாகும். இவ்விரண்டு வீடுகளும் எக்காலத்தும் உயிர்களுக்குச் சொந்தமாவதில்லை. குடியிருக்கும் வீடுகளில் எத்துணைத் துக்கம் விளைகின்றது? சரீரத்தில் குடியிருக்கும் ஆன்மாக்களுக்கும் உலககஷ்டங்கள் துக்கத்தை அத்துணை விளைவிக்கின்றன. இத் துக்கங்களினின்றும் விடுதலையையே மோக்ஷம் சிறப்புஎன்றும் கூறுவர். ‘எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யே யுன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்’ என்பது மணிவாசகம். இறைவனை அறியும் மெய்யுணர்வினால் இறைவன் கொடுக்கப் பெறுவது வீடு. இவ்வீடில்லாமல் துக்கத்தினை ஒழித்தற்கு இயலாது. எனவே பெருமானை அடைந்து வீடு பெற்றுப் பிறவாமல் இருத்தல்வேண்டும். இறைவனை அடைவது எப்படி? இறைவன் சச்சிதானந்த சொரூபன். சத்தாகியும்,



அறிவாகியும், ஆனந்த மயமாகியும் இருப்பவன். இது அருவமாயிருக்கும் நிலைமை. உருவத்திற்கு வாராத தன்மை. ஊனக் கண்ணினால் பார்த்தல் அரிது. சிற்றறிவு கொண்ட உயிர்களினாலும் பேரறிவுடையோனை அறிதற்கும் சாலாது. துக்கத்தில் ஆழ்ந்தவன் ஆனந்தத்தை அனுபவித்தல் முடியாது. யாவராலும் போற்றப் படுவதாகிய அறிவு நூல்களும் தம்மால் காண முடியவில்லையென்று கதறுகின்றன. ஆதலால் இறைவனை அடைவது அசாத்தியம். வீடு பெறுதல் அவ்வளவே. இறைவன் அருள் செய்தாலன்றே அவனைக் காணுதல் முடியும். அருட் கண்ணுடையவர்க்கே அரும் பெரும் பொருளா யிருக்கும் இறைவன் காட்சிப்படுவான்.

“ அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றாத்
தெருட் கண்ணினோர்க் கெங்குஞ் சீரொளியாமே ”

என்பது திருமூலர் திருமந்திரம். விளக்கமுடைய கண்ணுக்கு சூரியன் காணப்படுகிறான். கண் விளக்கம் இல்லாவிடத்து சூரியன் தோன்றான். அருட் கண்ணுடையோர்க்கு இறைவன் எதிர்ப்படுவான். இறைவனைக் காணுவதற்கு இறைவனது அருளைப் பெறுதல் வேண்டும். இறைவனது அருளும் உலகெலாம் ஆளுந் தன்மையது. இறைவனது அருளே பிறப்பை யறுப்பது. அருளாலே செம்பொருளைக் காண்பது இயலும் என்பது காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியின் ஒரு பாட்டின் கருத்தாம். அவனருளைப் பெறும் மார்க்கங்கள் பல. பொதுவாக நாம் உய்வதற்குச் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறிய விதிகளைத் தழுவி விலக்குகளைத் தவிர்ப்பது நன்மை யுடைத்தாம். தீயன தகர்த்து நல்லன செய்வதனால் நல்லாரிணக்கம் நேரும். நல்லாரிணக்கம்

எற்றுக்கெனின் அவர்கள் அருளைப் பெற்ற காரணத்தினாலே சிவனருளை விரும்புபவர்களுக்குத் தாங்கள் சென்ற வழியிலே அவர்களைச் செல்லுவித்து அவர்களும் அவ்வருளைப் பெறுதற்குத் துணையாய் நிற்பர். பொற் கொல்லனும் ஒரு பொன் துண்டை கம்பி நீட்டுவதற்கு அதனை அடித்தடித்து கம்மீஸ் என்னும் ஓர் அச்சில் இழுக்கின்றான். அக்கருவி பெரியோர்கள் போலத் துணை நின்று அக்காரியத்தை முற்றுவிக்கும். பெரியோர் துணை கொண்டு செய்யப்படுவன புருஷார்த்தங்களே. அவை அறம், பொருள், இன்பம், வீடு. முன்னர் மூன்றினில் ஒழுகி இறுதியில் வீடடைதல் வேண்டும். அறம் என்பது இல்லாளோடு பொருந்தியிருந்து தருமம் செய்தலும், வீடு, புத்திரர், பந்து, மித்திரர், செல்வம் இவைகளைத் துறந்து இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகுவதும் என இருவகைப்படும். இல்லறம் அன்பும் அருளும் உடையது. துறவறம் வேடங்களை அணிவது மாத்திரம் அன்று. இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவு உடையராய்ப் பிறவிகளினால் வரும் தீமைகளுக்குப் பயந்து வீடு பேறு ஒன்றினையே கருதி முயற்சிப்பதாய் இருக்கின்ற அறம் துறவறம் எனப்படும். இத் துறவறம் வினைகளெல்லாம் நசுங்கி மனமானது தூய்மையடையும்படிக் காக்கப்படும் விரதங்களும் அவ்வாறு தூய்மையான பின் தோன்றுவதாய ஞானமும் என இருவகைப்படும். விரதம் என்றால் கார்த்திகை அமாவாசை முதலிய சுப நாட்களில் ஒரு பொழுது உணவு கொள்ளல், இருபொழுதும் உணவு நீக்கியிருத்தல் என்று கொள்ளுதல் குற்றமாம். விரதம் என்றால் அருளுடைமை என்னும் அதிகாரம் ஆதியாகக் கொல்லாமை என்னும் அதிகாரம் இறுதியாகத் திருவள்ளுவரால் கூறப்படுவதைக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். பிற உயிர்கள் மேல் வரும் துன்பம் கண்டு அதனை நீங்க மனங்கொண்டு



இளகல். இவ்வருளுடையாரே பிற உயிர்களின் தசைகளின் மேல் இச்சை வையார். அவைகளை ஓம்புதல் வேண்டும் எனக் கருத்துடையவர்; தன்னுயிர்க்கு வரும் துன்பங்களையெல்லாம் பொறுக்குந் தவமுடையாராவர். தவத்திற் பொருந்துவராயின் கூடா வொழுக்கங்களை அறவே ஒழிப்பர். பிறருடைமையை வஞ்சித்துக் கொள்ளக் கருதார். பொய்ம்மையை அறவே ஒழிப்பாராவர். பொய்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விட்டவர். தமக்குச் சின மூட்டுங் காரணம் பிறரிடத்திருப்பினுங் கோபங் கொள்ளார். அந்தக் கோபத்தையொழிப்பதற்குப் பிறருக்குத் துன்பம் விளைவிப்பது நிகழ்கின்றமையினால் அதனையுந் தகர்த்தவர். அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய கொல்லாமையைக் கைக்கொண்டவர். இவ்விரதங்களை யுடையாரே அந்தக் கரணம் தூய்மையடைந்தவர்களாய் ஞானம் பெறுவதற் குரியவராவர். ஞானமானது அறியாமை நீங்கிய வழி கிடைப்பது. அதை வேதாகமங்களினாலே பெறுவது ஒருவகை; அனுபவத்தினால் பெறுவதும் மற்றொரு வகை. ஞானமே மோக்ஷத்துக்குச் சாதனம். ஞானம் என்பது வீடு பயக்கும் உணர்வு. அதனைப் பெறுதற்கு வழிகள் பல. வீட்டின்பம் உலகப் பொருள்களினிடத்துப் பெறும் இன்பத்தைக் காட்டிலும் மேலாயது. உலகப் பொருள்களோ காணப்படும் பொருள்கள்; கட்புலனுடைய காட்சிக்கு வருவன, அழியுந் தன்மையுடையன. எனவே, உலகம் அழியும். உலகம் அறிவில்லாதது. இவ்வாறு அழியுந் தன்மையை யுணர்வன உயிர்கள். அவை அழியா. ஆனால் உணர்வு கூடியன. அவ்வுணர்வும் சிற்றறிவே. பேரறிவுடையான் இறைவனாகும். அவனே அழியாதவன். அழியும் பொருள்களை எவனும் விரும்பான். உலகின்கண் செல்வம் முதலியன நிலையா. ஒருவன் பெற்றிருக்கும் யாக்கையும் நிலைக்குந் தன்மையது அன்று. ஒருவன்

உடைத்தாயுள்ள பொருளை அவனது பாட்டனும், தகப்பனும், புதல்வனும் தங்கள் தங்களது எனக் கூறுவதைக் காண்கின்றோம். இவனுக்கு உரித்தாகப் பேசக் காண்கிலோம். ஓர் இடையன் பல வீடுகளிலிருந்து பிறர் பசுக்களை ஓட்டிச் சென்று மேய்க்குங் காலத்து ஒன்று வழி தப்பிக் காணாமற் போயின் தன்னுடைய பசு காணாமற் போனதென்று துக்கிக்கின்றான். பிறருடைய பசுவாயிற்றே யென்று கருதுவதில்லை. ஆங்கு ஒருவரது உடைமைப் பொருள் அவனுடையதாகவே காணப்பெறவில்லை. பொருள்கள் எல்லாம் தமது உடைமைப் பொருளென்று சொல்லுதற்கில்லை. ஆகவே, அவற்றின் நிலையாமை யுணர்ந்து பற்று விடுதல் வேண்டும். இதனைப் புறப்பற்று விடுதல் என்று ஆன்றோர் கூறுவர். உயிர் பொருந்தியுள்ள உடம்பும் நிலையற்றது. பல பிறவிகளில் பல உடல்களைப் பெற்ற காரணத்தினால் ஓர் உடலும் ஒருவனுக்குச் சொந்தமாவதில்லை. யாக்கையின்மீது வைக்கும் பற்று அகப்பற்றென்பர். அதனையும் நீக்குதல்வேண்டும். இவ்விருவகைப் பற்றுக்களை விடுவதினாலே பிறப்பினுடைய இழிவை யுணர்ந்து வீட்டினது சிறப்பறிகின்றோம். இதுவே உண்மை யுணர்வாகும். வீடு பெறுதலென்பது பிறப்பினுடைய காரணங்களை யோர்தல். எடுத்த இப்பிறப்பு பிராரத்த வினையை யனுபவித்த பின்னரே நீங்கும். அதனைச் சார்ந்துள்ள வினைகளாகிய சஞ்சிதமும் ஆகாமியமும் ஞான உணர்வைப் பெற்ற மாத்திரத்தே நீங்கும். பிறப்பின் காரணங்களை யுணர்ந்தவர்களாய் பிராரத்த வினையைப் புசித்தற் பொருட்டு நிலவும் ஆன்மாக்கள் ஜீவன் முக்தர்கள் எனப்படுவர். அவர்கட்கு உலகப் பிரவிருத்தி உண்டெனினும் அவர்கள் உலகப் பற்றின்றி நடப்பர். மற்ற ஆன்மாக்களோ உலகப் பற்றை முழுதும் உடையவர். முத்தர்களுக்கும் பெத்தர்களுக்கும் உலக அனுபவம் வெவ்வேறே. முத்தர்களோ



காமம், வெகுளி, மயக்கம் என மூன்றும் அறவே ஒழிந்தவர். அனாதியாய் வருகின்ற அஞ்ஞானமும், அதைத் தொடர்ந்து வரும்படியான யான் எனது என்று மதிக்கும் அகங்காரமும், அகங்காரத்தால் நிகழும் அவாவும், அவ்வவா தூண்டுதலின்மேல் பொருள்களிற் செலுத்துகின்ற ஆசையும், அப்பொருள் கிடையாத வழிப் பொங்குகின்ற கோபமும் எனக் குற்றங்கள் ஐந்து. இவ்வைந்தையும் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றினுள் திருவள்ளுவர் அடக்கினர். அகங்காரம் அஞ்ஞானத்துள் அடங்கும். அதனை மயக்கம் எனக் கூறப்பட்டது. ஆசை அவாவின்கண் ணடங்கும். அது காமமென்று அழைக்கப்பட்டது. கோபம் என்பது வெகுளி. இம்மூன்று குற்றங்களினின்றும் அறவே நீங்கியவர்கள் முத்தர்கள். முற்றும் ஒழித்தவர்கள் என விளக்கும்பொருட்டு,

“காமம் வெகுளி மயக்கமிவை மூன்றன்
நாமங் கெடக் கெடு நோய்.”

எனத் திருக்குறளில் வந்தவாறு காண்க. இக்குற்றங்கள் பெயரில்லாது செய்தல் வேண்டும். ‘அற்றது பற்றெனின் உற்றது வீடு’ என்பது திருவாய்மொழி. அறுவது மிகக் கஷ்டம். அற்ற பின்னரே ஞானம் உதிக்கும். ஞானம் மூன்று வகை. கண் இந்திரிய முதலிய வழியாய் வருகின்ற உணர்வு பாசஞானம் எனப்படும். உயிரினது அறிவு பசுஞானம். இறைவனை அறியும் அறிவு பதிஞானம் என்பர். முன்னவை இரண்டும் பிரயோஜனமல்லாதன. பதிஞானம் ஒன்றே பிரயோஜனமுள்ளது. பசுபாச ஞானங்களினாலே இறைவனைக் காணுதல் இயலாது. பதிஞானம் பெற்ற ஒருவனே அவரைத் தரிசிப்பன்.

‘பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தால் நேசமொடு உள்ளத்தே நாடி’

என்றருளினர் அருணந்தி சிவாசாரியர். உபநிஷத்துக்களும் அவ்வாறே கூறுகின்றன. பதிஞானம் பெறும் வழி என்னை? அதனைப் பெறுதல் உபாசனையால்தான் இயலும். உபாசித்தல் என்பது பலகால்மனம்ஒருமுகப்பட்டு இறைவனைத் தியானிப்பது. மனம் நிற்றற்கு வழியாயிருப்பது. உபாசனை முதிர்ந்த வழி இறைவன் எதிர்ப்படுவான். அரிசி பெறுவதற்கு நெல்லைப் பலமுறை குத்துகின்றோம். உமிகளையும் தவிடையும் நீக்கிய பின்னரே அரிசி உபயோகத்திற்கு வருகின்றது. அதுபோலவே உயிர்கள் மாட்டுள்ள குற்றங்களை (உபாசனையாகப் பலமுறை தியானித்தலால்) நீக்கின காலத்து இறைவன் காட்சிக்குப் புலனாகின்றான். உபாசனைக் காலங்களில் ஐந்து யக்ஞங்கள் செய்யப்படுகின்றன.

முதலாவது கர்மயக்ஞம். கர்மயக்ஞத்தை முன்னே செய்யென்பது பல ஆசாரியர்களின் கூற்று. கர்மங்கள் என்பன சமயானுட்டானம், (காலா காலங்களிற் செய்யப்படுவனவாகிய கர்மங்கள்) அவையே நித்திய கர்மங்களாம். பிராணாயாமம் அதற்கு அங்கமாகும். பிராணவாயுவானது ஓர் முறையின்றி உஸ்வாச நிஸ்வாசமாகச் சலித்துக்கொண்டிருக்கும். அப்படிச் சலிப்பதினால் ஆசாபாசங்கள் மிகுகின்றன. அவை ஒழிதற்குப் பிராணவாயு பந்தம் செய்தல் முறை. ஆயாமம் என்பது தடுத்தல் எனப்பொருள்படும். ஆகவே பிராணாயாமம் என்றது பிராணவாயுவின் வேகத்தைத் தடுத்தல் என்பதாம். வேகமாய்ச் செல்லுங் குதிரையைக் கடிவாளங்கொண்டு அதனை நடத்துவதுபோல் பிராணாயாமத்தினாலே மனதினுடைய வேகத்தைப் பிராண வாயுவினுடைய வேகத்தைக் குறைப்பதினால் குறைத்து ஒருமுகப்படுத்துதல்வேண்டும். இதற்கு மந்திரங்களும் துணை செய்கின்றன. ஒன்றியிருந்து நினைவதற்குக் கர்மயக்ஞம் சாதனமாகின்றது.



இந்திரியங்களை அடக்குவதற்கு விரதங்களை அனுஷ்டித்தல்வேண்டும். இதனைத் தபோயக்ஞம் என்றுகூறுவர். இந்திரியங்கள் மூலமாக வருகின்ற அவாக்களைத் தடுத்தலே இந்தயக்ஞத்தின் காரியம். மந்திரம் ஜெபித்தல் ஜெபயக்ஞம். அதர்வசிகையும் மந்திரம் ஜெபிக்கின்றவனே தூய்மையுடையவன் என்று கூறுகின்றது. மந்திரங்களில் உயர்ந்தது திருவைந்தெழுத்து. அதனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் நன்னெறியடைவர். அம்மந்திரம் வேதம் நான்கினுக்குள் மெய்ப்பொருள். அது இறைவனுடைய நாமம். அம்மந்திரம் அன்னியர் காதுபடாமல் ஜெபித்தல் உத்தமம். பிறர் காதுபடச் சொல்லல் மத்திமம். அடிநாக்கின் அசைவில்லாமல் ஜெபித்தலே முறைமை. சிவாசாரியரை யடைந்து தீட்சைபெற்றவரே அதனைச் செபித்தற்கு அருகராவர். தீட்சையில்லாதவர் பஞ்சபுராணத்தையேனும் ஓதுதல்வேண்டும். பஞ்சபுராணமென்பது, சம்பந்தர் அப்பர், சுந்தரர் இவர்கள் பாடிய தேவாரங்களில் ஒன்றும், திருவாசகத் திருக்கோவையாரில் ஒன்றும் திருவிசைப்பா ஒன்றும், திருப்பல்லாண்டு ஒன்றும், பெரியபுராணத்துள் ஒன்றும் ஆக ஐந்து பாடல்களேயாம். பெண்களும் இதனைக் கற்றற்கு உரியராவர். அவர்களும் நித்தமும் ஓதல்வேண்டும். கர்மயக்ஞம் தபயக்ஞம் ஜெபயக்ஞம் ஆக இம்மூன்றும் தியானம் கூடுவதற்குச் சாதகமாகின்றன. கொக்கு நாரைகளைப்போன்ற அசைவற்ற நிலைமையைப் பழகல்வேண்டும். மீன்கொத்திப் பறவைபோன்று குறித்த இலக்கினின்றும் தவிராதிருத்தல் வேண்டும். இடுப்பு, கழுத்து, தலை முதலியவைகளை ஒரு நேராக நிறுத்தி இறைவனைக் குறித்துத் தியான உணர்வு பெறுதல் வேண்டும்.

"குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்

செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே"

என வரும் கந்தரநுபூதித் திருப்பாட்டின் கருத்தை நோக்குக. தியானத்தின் பயன் அகங்காரம் அறச் செய்தல். அகங்காரம் அற்றவனே இறைவனுக்கு ஞானபூசை செய்புந் தொழிலில் முற்படுவான். அதுவே ஞான யக்ஞம். ஞான நூல் ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், அதனைச் சிந்தித்தல் இவ்வைந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை. ஞான நூல்கள் பக்குவர்களுக்கு ஏற்ற புத்தகங்கள். ஞான நூல்களினுடைய பயனும் தன்னையறிந்து உலகத்தின் தன்மையை யுணர்ந்து இறைவனை அடைவதே. ஞானம் ஒன்றே இறைவனை அடைவிக்கும். இறைவனை அடைதலாவது அவனுடைய வியாபகத்துள் அடங்கி நிற்றல். இறைவன் ஆன்மாக்களை இழுக்குந் தன்மையுடையவன், காந்தம் இரும்பை இழுப்பதுபோன்று. காந்தம் அசையாது நின்று இரும்பை இழுக்கும். இரும்புக்கே அசைவு காணப்படுகிறது. இறைவனும் இரும்பைப்போன்று நிருவிகாரியாய் நின்று உயிர்களைத் தன்வசமாக்குவான். இறைவன் தன்னைச் சார்ந்த ஆன்மாவைத் தன் வண்ணமாக்குதற்கு அவ்வுயிரினிடத்துள்ள மலங்களைப் போக்குவன். நெருப்பானது தன்னிடத்தே காய வைத்த இரும்பை அதனிடத்துள்ள கறையினைப் போக்கித் தன்வண்ணமா யிருக்கும் சிவப்பினை அவ்விரும்புக்கு ஏற்றுவதுபோல, சிவன்வசமாய் நின்ற உயிரும் சிவத் தன்மையை அடைகின்றது. நீரின்கண்ணே கலந்த உப்பு அந்நீரிடத்து ஒவ்வொரு திவலையினும் காணப்படுவதுபோல், சிவத்தினுடைய குணமெல்லாம் அடைந்த உயிரினிடத்தே காணப்படுகின்றது. உயிர்கள் எண்குணங்களைப் பெறுகின்



றன. 'எண்குணத்துளோமே' எனும் அப்பாது மொழியாற் கண்டுகொள்க. இரச குளிகை செம்பையுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச் செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கிக் காட்டுமாறுபோல இறைவன் உயிரை அன்பினால் உருகச் செய்துத் தன்னைச் சாரவும் செய்து, தன்வயமாக்கித் தன் குணங்களைத் தந்து, உயிரினது இயல்பு சிறிதுந் தோன்றாது, அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கிக்கொள்வன். இக்கருத்தினை,

"இரும்பைக்காந்தம் வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானாக்கி
யரும்பித்திந் தனத்தையன லழிப்பது போன்மனத்தை
யறுத்த மலனப்பணைந்த வுப்பே போ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடங்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப் பானாகிக்
கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே"

எனச் சிவஞானசித்தியார் விளக்குவதாகும். இங்ஙனம் ஒடுங்கிக்கொண்ட உயிர் மீண்டும் பிறப்பதில்லை. வெல்லம், தேன், கருப்பஞ்சாறு முதலிய சுவைப் பொருளெல்லாம் கலந்தவழி உளதாகிய சுவையானது இது வெல்லத்தின் சுவை, இது தேனினது சுவை, இது கருப்பஞ்சாற்றின் சுவை எனப் பிரித்து அறிய வாராமையைப்போல இறைவனும் உயிரின்கண் கலந்தவழி இவ்வியல்பிற்று எனப் பிரித்தறியமுடியாத இன்ப சொரூபமாய்த் தலைப்படுகின்றான். அந்த இன்ப சொரூபமே வீடாகும். அதுவே பிறவியையொழிப்பது. ஈண்டு வாராதிருக்கும் நெறியேயாகும்.

இச்சொற்றொடர் திருக்குறளின்கண் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்துள் ஆறுவது செய்யுளாகும். அது,

> "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி"

என வரும். ஈண்டு என்றது இப் பிறவியாகிய மக்கட் பிறவி. இப்பிறவி பெறுதற்கு அரியது என்பர். அரியதாயின் அது வந்த பின்னரே அதனைப் பயன்படுத்துதல் வேண்டும். பெறுதற்கரிய பிறவியைப் பெற்றவர் பிரானடியை நாடுதல் முறைமை. நாடுதலாவது உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர்பாற் கேட்டல். இது கற்று எனும் பதத்தினாலே அறியக் கிடக்கின்றது. தேசிகன் கற்பித்தவழியே நிற்றலினாலே அரிதாயிருக்கும் மெய்ப்பொருளைக் காணத் தலைப்படுவர். மெய்ப்பொருள் காண்பது மிகக் கடினமானதால் பலரிடத்துப் பலகாலுஞ் சென்று பயில்வது நன்று. கண்டவர் முற்சொல்லிய ஐந்து யக்ஞங்களை முடித்து இறைவனை உணர்ந்தவர். மற்று எனுஞ் சொல் மீண்டு என்னும் பொருளின்கண் வந்தது. இவ்வுலகத்தின்கண் மீண்டும் பிறக்கும் நெறியை யடையார். இறைவனை உணர்ந்தவர்கள் பிறவி யடையார் என்பது கருத்து. இவ்வுலகத்தின்கண் வாராது மெய்ப்பொருளாகிய சிவனிடத்தே பொருந்துவர். பிறவித் துன்பமின்றி நித்திய சுகத்தின்கண்ணே பிறழாதிருப்பர்.

---


சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் உரையும்

சமாஜப் பதிப்பு

தனிப்பிரதி விலை அணா 12 ; ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 5.

எட்டுப் பிரதிகள் விலை ரூபா 5 ; தபாற்கூலி வேறு.

**சில பிரதிகளே உள்ளன. உடனே வாங்குக.**


# சைவர்கட்குத் திருமுகம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

**அன்பு, அறிவு, செயல்கள் நேரிதாய் ஒன்றுபட்டுச் சீரிதாய் விளங்கும் செந்தண்மைச் சிவநெறிப் பெரியீர்,**

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு அடிகள் இற்றைக்கு ஏறக்குறைய 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திருவிளக்கனைய திலகவதியம்மையாரால் திருவாளன் திருநீறு கொடுக்கப் பெற்றுத் தம்மை அடைந்திருந்த சூலை நோயுடனே மும்மல நோயும் நீங்கப் பெறும் அருட்பெரும் பேற்றினை அடைந்த திருப்பதியாகிய திருவதிகை வீரட்டானத்தில் நீங்கள் உள்ளுதோறுள்ளுதோறுமுள்ள முருக்கிக் களிப்படையச் செய்யும் சைவ சித்தாந்த உண்மையை அவண் ஆர்வத்துடன் வந்து கேட்கும் அன்பர்களுக்குச் சொற்பொழிவுகளினால் அறிவுறுத்தக் குழுமியிருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் எனது தாழ்மையான வணக்கத்தை உரியதாக்குகின்றேன். உங்கள் குழுவுக்குச் சேர்ந்த யானும் அவண் வந்து தங்களை நேரிற் கண்டும், நேரிற் கேட்டும், அன்புடனளவளாவி இன்பமார்ந்திருக்க மூப்பினாலுண்டாகிய எனது உடல் வலிக்குறைவால் இயலாதிருக்கின்றேன். ஆதலின் சில கருத்துக்க ளடங்கிய இச் சிறு வேண்டுகோளை உங்களுக்கு நினைப்பூட்டும் வகையிற் கூறுதற்குத் தாழ்மையுடன் அனுப்புகின்றேன். தாங்கள் அதிலடங்கியுள்ள கருத்துக்களைச் செவி சாய்த்துக் கேட்டு உளங்கொண்டு ஆய்ந்து அவைகளில் தள்ளத் தக்கவைகளைத் தள்ளி உலக நலத்துக்கு வேண்டப்படுவதாகக் கொள்ளத் தக்கவைகளைக் கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

2. உலகில் வாழும் மக்கள் இம்மை மறுமை இன்ப நலங்களையும், வீட்டின்ப நலத்தினையும் அடைந்து உய்யுமாறு அவர்களுக்கு வழிகாட்டும் சமயங்கள் பலவுள. அவற்றுள் நமது சைவ சமயமே சமயங்களுக்கு எட்டாதபழம்பொருளை அடைந்து மேலான வீட்டின்பம் அடைதற்கு வழிகாட்டுதலானும் ஏனைய சமயங்களோடும் சிறிதும் பிணக்கின்றி அவை யெல்லாம் மக்களுடைய பலதர அறிவு நிலை நோக்கி வேண்டப்படுவனவாயும் தன்னைச் சேர்தற்குப் படிகளாகவும் கொள்ளுதலானும் அவற்றிற் கெல்லாம் மேலான சமயம் என்பது சைவசமயப் பெரியாராற் கூறப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் சைவ சமயத்தை மேலான சமயமென்று கூறினது அச்சமயத்திலுள்ள நாம் 'உயர் சமயத்திலுள்ளோம்' என்று பெருமிதங்கொண்டு செருக்கடைவதற்கன்று; மற்றென்னையோ எனில் நாம் அச்சமயத்திற்கு உரிய பணிவு உள்ளத்தால் அப்பொறுப்பினை அறிந்து உணர்ந்து நமது சமயத்திற் பிறந்திருப்பினும் சமய அறிவில்லாத சைவ மக்களுக்கும் பிற சமய மக்களுக்கும் அதன் உயர் நிலையை வாயினாற் கூறாது நமது ஆன்ற அறிவாலும், சான்ற ஒழுக்கத்தாலும் காட்டி அவர்கள் அதனை அறியும்படி செய்தலாகும். கடவுள் எவ்வுயிரிலும் நிறைந்து வீற்றிருக்கும் இயல்பு பற்றி உலகின்கண் விளங்கும் சமயம், சாதி, குலம், குடி, பால், கொள்கை, நாடு, நகர் முதலிய வேறுபாடுகள் சிறிதும் தடைகளாயிராதவண்ணம் நாம் எல்லாமக்களிடத்திலும் அன்புடன் ஒழுகுதல் மாத்திரமன்றி ஏனைய தாழ்ந்த உயிர்களிடத்திலும் அன்புடன் ஒழுகல் வேண்டும் என்பது நமது சமய ஒழுக்கக் குறிக்கோள். ஆதலின் நாம், மனை வாழ்வு நலம், குலவாழ்வு நலம், குடிவாழ்வு நலம், நாட்டு வாழ்வு நலம், முதலிய சிறுவரை நலங்களைப் பேணி ஒழுகக் கடமைப்பட்டிருப்பினும் அந்நலங்களை எல்லாம் எல்லா உயிர்களுடைய



நலங்களுமடங்கிய உலகநலத்துக்குட்பட்டே பேணுதல்வேண்டும். உலக நலக் குறிக்கோளை சைவசமய அறிவர்கள் தங்கள் மெய்யறிவினால் இயற்கை முறையிலறிந்து நூல்களில் நீண்ட காலத்துக்கு முன்னே கூறியிருக்கிறார்கள்.

3. மெய்யறிவு நிலைக்குத் தாழ்ந்த நிலையில் விளங்கும் கூர்த்த ஆராய்ச்சி அறிவுத் திறனுடைய மேற்கு நாட்டு அறிவர்கள் மக்களுலகில் இதுகாறும் அடைந்திருக்கிற உலக அநுபவ அறிவின் பயனாகக் காரியத்திலிருந்து காரணத்தை நோக்குதல் பற்றி மேலே கூறிய உலக நலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு மக்கள் ஒழுகினாலொழிய இனி வருங்கால உலகவாழ்வு நடைபெறாது என்று கூறுகிறார்கள். அவர்கள் இவ்வாறு அக்கருத்தைச் சென்ற சில ஆண்டுகளாகக் கூறிக் கொண்டு வரினும் செயல்முறைக்குக் கொண்டுவரப் பல காரணங்களால்இடர்ப்பட்டுத் தயங்குகிறார்கள். ஆதலின் இந்த இயல்பு முறை உலகநலக் குறிக்கோள் ஒழுக்கத்தை நாம் மேலே கூறியபடி ஒழுகுதலுடன் உலகிற்கு ஏதுக்களுடன் கூறி அறிவிப்போமானால் உலகம் இப்பொழுதடைந்திருக்கிற துயரினின்றும் நீங்கி நலமடையும்; நாமும் அவ்வுலக நலத்தைக் குறியாகக் கொள்ளும் முழுமுதற் கடவுளுக்குச் செய்யவேண்டிய கடனைச் செய்தவர்களாவோம். ஆதலின் நமது தென்தமிழ் நாட்டிலுள்ள சைவசித்தாந்தக் கழகங்களெல்லாம் சைவசமயத்திலுள்ள இந்த உண்மையை மக்களுக்குச் சொற்பொழிவாலும் கட்டுரை எழுதுவதாலும் சிறப்பாகக் கூறிக் கொண்டு வருதல்வேண்டும். ஆங்கிலம் கற்றுத் தேர்ந்த சைவர்கள் இந்தியநாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள ஆங்கிலப்பத்திரிகைகளுக்கு இந்த உண்மையைப்பற்றியகட்டுரைகளும் நூல்களும் எழுதிக்கொண்டு வருதல் வேண்டும். இதுவே எனது சிறிய வேண்டுகோள். இறைவனது இன்னருளால் அனைத்துயிருமின்புற்று வாழ்க.

## சைவசமய உயர்நிலையானது அதனைப் பின்பற்றி ஒழுகும் மக்கட்டொகையைப் பெருக்குதற்காகத் தாழ்த்தப்படுதல் விரும்பத்தக்கதா?

சிவமாம் பெருவாழ்வு அடைந்துள்ள நமது சைவசமய ஆசிரியர்கள் மெய்கண்டதேவர், குமரகுருபர அடிகள், தாயுமான அடிகள் முதலிய சைவப் பெரியார்கள் அருள் விளங்கும் இயற்கை முறையை மலம் முற்றிலும் நீங்கிய தங்கள் அருளறிவாலறிந்து கூறுகிறபடி, நமது சைவசமயமானது, முடிந்த முடிவான மெய்யறிவையும், அவ்வறிவினால் அடையப்பெறும் மேலான வீட்டினையும் (பரமுத்தியையும்) உலகிலுள்ள எல்லா உயிர்களின் நலத்துக்காகக் கூறுகின்றது. ஆதலின் அது உலகிலுள்ள எச்சமயத்துக்குமில்லாத சிறப்பைத் தனக்கே உடையதாயும் உலகில் எப்பாலார் கூறும் அறிவியலுண்மைகளையும் (Scientific truths), தத்துவ உண்மைகளையும் (philosophical truths) பூர்வபக்க உண்மைகளாகச் செய்யும் திறமையும் வாய்ந்துள்ளது. சைவசமயத்திலுள்ள தத்துவ அமைப்புக்களும், தத்துவ இயக்கங்களும், அவ்வமைப்புக்களுக்கும், இயக்கங்களுக்கும் பொருந்திய சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய முறைகளும் உலகிலுள்ள வேறு எத்திற அறிஞராலும் கூறப்படவில்லை. அது அத்தகைய உயர்நிலையிலிருப்பதனாலேதான் அதற்குத் தன்னிற் றாழ்ந்த நிலையினையுடைய எச்சமயத்துடனும் எக்கொள்கையுடனும் சிறிதும் பிணக்கு இல்லை. அத்திறத்த அரியபெரிய உண்மைகள் எல்லாம் இனி வருங்காலத்தில் சைவசமய அறிஞராலும், உலகிலுள்ள பிறசமய அறிஞராலும், கலை அறிஞராலும், தத்துவ அறிஞராலும், அறிந்து போற்றப்பட்டு உலகிற்குப் பயன்படச் செய்யத் தக்கவைகள். வருங்காலம் என்பது நாம் நமது வாழ்நாளில்



அறியக்கூடிய காலமாயிராமல் நீண்ட காலத்துக்குப்பின் நிகழுங் காலமாகும். பிற சமயங்களும் அறிவிற் பெரியாராற் கூறப்படினும் அவைகளெல்லாம் ஒவ்வொரு நாட்டில், ஒவ்வொரு காலத்தில் வாழ்ந்துவந்த மக்களுக்கு அவர்களது அறிவு நிலைக்கு எட்டத் தக்கவாறு கூறப்பட்டுள்ளனவேயன்றி சைவசமய உண்மைகள்போல் முடிந்த முடிபான உண்மைகளாகக் கூறப்படவில்லை. கிறிஸ்து சமயம், மகம்மதிய சமயம், பௌத்த சமயம், சொராஸ்டிர சமயம் ஆகிய பெரிய சமயங்களிலும் அச்சமயப் பெரியார்களால் சிறந்த அறிவுப்பகுதி உண்மைகள் அக்காலத்துள்ள அறிவிற் சிறந்தவர்களுக்குப் பயன்படும்படியாய்க் கூறப்பட்டுள்ளன. ஆனால் இப்பொழுது வாழும் அச்சமயத்தவர்கள் அவ்வுயர்தர அறிவு உண்மைகளையெல்லாம் பொதுவாக அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் பின்பற்றிவரும் சமயங்கள் (Popular religions) பொதுமக்கள் அறிவுக்கேற்றபடி தாழ்ந்த தரத்திலுள்ளவைகள். அச்சமய உண்மைகளெல்லாம் தேவார திருவாசகம், பதினான்கு சைவசித்தாந்த நூல்கள் முதலிய தமிழ்மறை நூல்களிற் கூறப்பட்ட ஒழுக்கக் கட்டளை (Moral standard)க்குத் தாழ்ந்த தரத்திலுள்ளவைகள். ஆனால் சைவசமயத்திலுள்ள நாமும் பெரும்பாலும் அக்கட்டளையைப் பின்பற்றி நடவாமல் இருக்கிறோம். சைவசமய ஒழுக்கக் கட்டளைக்கும் பிறசமய ஒழுக்கக் கட்டளைக்கும் உள்ள வேறுபாட்டை உலகிலுள்ள எல்லா மக்களுக்கு மாத்திரமல்லாமல் கீழான உயிர்கள் உட்பட எல்லா உயிர்களுடைய நலம் என்ற உரை கல்லினால் உரைத்து அறியலாம். எல்லா உயிர்களும் நலம் அடையும் ஒழுக்க நலம் என்பது உயிர் நேய ஒருமைப்பாடு (Universal Brotherhood) என்று கூறப்படுகின்றது. உலகில் எங்கும் இப்பொழுது நிகழும் அறிவுப் போக்கை (Trend of knowledge) அதற்குரிய ஏதுக்

களுடன் நாம் உற்றுநோக்குவோமானால் அது உயர்நேய ஒருமைப்பாட்டை நோக்கியே நிகழ்கின்றது என நாம் தெளிவாய் அறியலாம். இந்த உயிர் நேய ஒருமைப்பாடு உலக நலக்குறிக்கோள் இப்பொழுது நமது அருமைச் சைவசமயத்துக்கே உரிய சிறப்பாயுள்ளது. ஆதலின் உலகில் இப்பொழுதுள்ள அறிஞர்கள் அறியும்படி நாம் சைவசமய உண்மைகளை அறிவிப்போமானால் உயர்நேய ஒருமைப்பாட்டுக் கருத்தை உளங்கொண்டிருக்கிற அவர்கள், சைவசமயத்தை அறிந்து பின்பற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

2. உண்மை இவ்வாறிருக்க, சைவசமயத்தில் இப்பொழுது சிறிய தொகையினராயுள்ள நாம் நமது சமய உயர் ஒழுக்கக் கட்டளையை (High moral standard)ப் பின்பற்றி ஒழுகுதல் சரியா அல்லது நமது சமயம் பிற சமயங்களைப்போல் பெருந்தொகை மக்களை யுடையதாய்ப் பல்கிப் பெருகுதற்கு அதன் உயர் ஒழுக்கக் கட்டளையைக் கிறிஸ்து சமயம், மகம்மதிய சமயம் முதலிய பிற பெரிய சமயங்களின் கட்டளையின் தரத்துக்குத் தாழ்த்தி நாமும் அவர்களைப்போல் ஒழுகுதல் சரியா என்ற கேள்வி எழுதற்கே இடம் சிறிதும் இல்லை. கிறிஸ்துப் பெரியார் கூறிய "பிறர் உனக்குச் செய்தல்வேண்டும் என்று விரும்புவதையே நீ பிறருக்குச் செய்" என்ற மக்களுயிர் ஒருமைப்பாட்டொழுக்கத்தை (Brotherhood of man) மேற்குநாட்டுக் கிறிஸ்தவர்கள் 19-வது நூற்றாண்டில் ஒழுகியிருந்தார்களானால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த கொடிய பெரும்போர் நிகழ்ந்தேயிராது. இதனால் ஒரு சமயத்தினர் பெருந்தொகையினரா யிருத்தல்பற்றி உலகுக்கு நற்பயனுண்டாகாது என்பது தெளிவு. இப்பொழுதுள்ள எந்தச் சமயத்திலும் அந்தச் சமய உண்மையை உள்ளபடி அறிந்து உலக வாழ்வு மயக்கத்துக்கு உட்படாமல் அதன்படி வாழ்க்



ணகயில் நேர்மையாய் ஒட்...
ராகவே யிருக்கிறார்கள். அவ்..க் கல்வெட்டுக்களிலும்
லும், நன்முயற்சியாலுமே உலகம் முன்னேற்ற மடை வருகிறது. கிறிஸ்து, மகம்மதிய சமயங்களுக்கு இக்காதில் இந்துசமய மக்களிலிருந்து செய்யப்படும் மாற்றங்களால் அச்சமயங்கள் உலக நலத்திறனை அடையவில்லை. அறிவளர்ச்சியே உயிர் வளர்ச்சி (Soul Evolution). ஒருவனுக்கு அறிவு விளக்கமுண்டாவது அவனுடைய நல்லொழுக்கத்தாலும், நன்முயற்சியாலுமன்றி அவன் பிறிதொரு சமயத்தைச் சேர்வதனா லன்று. மக்கட் பொது அரசியல் ஆட்சி வழங்கப்பட்டுவரும் இக்காலத்தில் கிறிஸ்து, மகம்மதிய சமயத்தார்கள் பிற சமயங்களிலுள்ளவர்களைத் தங்கள் இனத்தினர்களாகச் சேர்த்தல் அவர்களுடைய ஆட்சியுரிமையைப் பெருக்குதற்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

3. இந்த நிலையில் சைவசமயத்தினராகிய நாம் நமது சமய ஆன்றோர் தங்கள் அருள் அறிவால் உண்மையிலுள்ளபடி அறுதியிட்டுக் கூறின உயர்தர ஒழுக்கக் கட்டளையைக் குறைத்தலினால் சிறிதும் நற்பயனடையாம லிருத்தலுடன் கிறிஸ்து, மகம்மதிய சமயத்தார் இப்பொழுது உயிர் அன்புக்கு மாறான கொடிய செயல் என்று ஒப்புக்கொள்ளாத புலாலூண் முதலிய அச்சமய ஒழுக்கங்களைக் கடைபிடித்தொழுகியும், அவர்கள் இப்பொழுது மறுத்துக் கூறுகிற வினைச்சட்டம், பல பிறப்புண்மை, ஆணவமல உண்மை முதலிய சிறப்பு உண்மைகளை மறந்தொழுகியும் தாழ்ந்த நிலையை அடைவோம். இதுவன்றி அன்புநெறி பூண்டொழுகும் சைவசமய உயர்நிலையானது இப்பொழுது பிறசமய அறிஞர்களுக்கு உயர்தாக் குறிக்கோளா யிருத்தலையும் கெடுத்து உலக நலத்துக்கு இடையூறு செய்தவர்களாவோம். நாம்

களுடன் நாம் உற்றுநோக்குவோமாகு சேர்ந்த சிற்றறிவினால் ஒருமைப்பாட்டை நோக்கியே நிகழ்த்திய சமய உயர்நிலையைக் வாய் றப்போமானால் நமது அருமறைத் தேவார, திருவாச கலக்ளே, பதினான்கு சித்தாந்த நூல்கள் முதலிய நூல்களால் துக்கே அடையும் பயன் யாது? நமது வழியாய்ப் பிற சமய துள்கள் அடையும் பயன் யாது? நமது சமயத்துக்கு மேற் கலைகாள்களா யுதவும் நூல்கள் யாவை? உயர் ஒழுக்கத்தைக் கடைபிடித் தொழுகுகிற சிறுதொகை மக்களுடைய நன் அநிலைக்குப் பெருந்தொகை மக்களை உயர்த்துதல் முறையே ன்றித் தாழ்ந்த ஒழுக்கமுடைய பெருந்தொகை மக்கள் சிநிலைக்குச் சிறுதொகை மக்கள் நிலையைத் தாழ்த்துதல் சிறி தும் தகுதியன்று. அந்தத் தப்பு முறையைப்பற்றி நினைத்தா லும் மனம் மாசடையும்; பேசினாலும் நாச்சோர்வடையும். நாம் இப்பொழுது சிறியதொகை மக்களாயிருந்தாலும் உலக நாகரிகம் திருத்தமடைய அடையப் பிறசமய அறிஞர்கள் சமய மாற்ற முறையினாலன்றித் தாங்களாகவே நமது சமய உண் மைகளைத் தங்கள் விளக்க அறிவால் அறிந்து ஒப்புக்கொண் டொழுகி நற்பயனடைவார்கள். சென்ற 40, 50 ஆண்டு களாகப் புலாலூண் வழக்கத்தை மேற்கொண்ட பிறசமய அறிஞர்கள் புலாலூண் மறுப்புச் சங்கம் அமைத்து அவ் வொழுக்கத்தைப் பரப்பி வருதலும், பல பிறப்பு உண்மையை யும், வினைச் சட்ட உண்மையையும் ஒப்புக்கொள்ளாத கிறிஸ் தவ அறிஞர் பலர் அவ்வுண்மைகளை ஒப்புக்கொண்டு நூல் கள் வெளியிட்டு வருதலும் நமது சமய உண்மைகள் பிற்கால உலகில் பரவி விளங்கும் என்பதை முன் அறிவிக்கிற குறிக ளாகும். இன்னும் விரிப்பில் உரை பெருகும்.

## திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் கண்ட

# உயரிய செய்திகள்

[வை - சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

திருப்புறம்பியம் என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்றாகும். இது தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இது, சைவசமய குரவர்கள் நால்வர்களாலும் பாடப்பெற்ற பழைமையும் பெருமையும் வாய்ந்தது.

இது, பிற்காலத்துச் சோழர்களில் முதல்வனும் கி. பி. 880 முதல் 907 வரை அரசாண்ட முதல் ஆதித்தனால் எடுப் பிக்கப்பட்ட மிகப் பழைய கற்றளியையுடையது. இவ்வால யத்திற்கு ஆதித்தேச்சுரம் என்ற பெயர் உண்டென்று சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எனவே, இவ்வாலயம் கி. பி. 907-க்கு முன்னரே கட்டப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

இக்கோயிலின் திருத்தோரணத் திருவாயிலிலும் (முதற் கோபுர வாசல்) திரு விமானத்தின் உட்பக்கத்திலும், அறு பான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய காடவர்கோன் கழற்சிங்கரது, (இரண்டாம் நரசிங்க வர்மரது) தூண்கள் இருப்பனகொண்டு, இம்மன்னர் காலத்திலேயே இவ்வாலயம் கற்றளியால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், பின்னர் முதலாம் ஆதித்தன் இதை இடித்து இதுபொழுதுள்ள பெரிய ஆலயத்தை எடுப்பித்திருத்தல் வேண்டுமென்றும் கொள்ள இடனுண்டு.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய சைவசமய குரவர்களால் பாடப்பட்டுள்ளமையின், கி. பி. ஏழாம் நூற்றுண்டிலும் இங்கு ஆலயம் பெருமையுடன் விளங்கியிருத்தல் வேண்டும்.

இவ்வூர்ப் *புராணத்தில் இவ்வாலயத் தெழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒரு வணிகப் பெண்ணின் திருமணங் குறித்துச் சான்று பகர்ந்தார் என ஒரு வரலாறு காணப்படுகின்றது. அதற்கு ஏற்ப இங்கு இறைவன் திருப்பெயரும் சாட்சி வரதநாதர் என வழங்கி வருகின்றது. சிலப்பதிகாரத்து வஞ்சின மாலையுட் காணப்படும்,

> " வன்னிமரமு மடைப்பளியுஞ் சான்றாக
> முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் "

என்ற தொடரும் மேற்கூறிய வரலாற்றையே குறிக்கின்றது. சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இவ்வரலாறு அந்நூல் தோன்றிய காலமாகிய கி. பி. முதல் நூற்றுண்டிற்கு முன்னரே நிகழ்ந்து, தமிழ்நாடெங்கும் பரவிய தாகல்வேண்டும். ஆகவே, இத் திருப்புறம்பியத்திலுள்ள ஆலயம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டபழைமையும் பெருமையும் வாய்ந்ததென்பது புலனும்.

இவ்வாலயம், முதல் ஆதித்தன் காலமுதல், பராந்தகன் I, ஆதித்தன் கரிகாலன் (இரண்டாம் பராந்தகசோழ

*இப்புராணம், கி. பி. 1801 முதல் கி. பி. 1835 வரையில் உடையார் பாளையத்தில் ஆட்சி நடாத்திய மேன்மைதங்கிய கச்சிரங்கப்ப உடையாரவர்கள் காலங்களிலும் அவருக்குப்பின் பட்டமெய்தியவர்களிற் சிலர் காலங்களிலும் சமஸ்தான வித்துவாஞக இருந்த திருப்புறம்பியம் வீரசைவராகிய பாலசரஸ்வதி சுப்பிரமணியக் கவிராயரால் தமிழில் இயற்றப்பெற்றதாகும். இப்புலவர் பெருமான் இல்லம், கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநராகிய திருப்புறம்பியம் உயர்திரு பண்டாரத்தாரவர்கள் இல்லத்திற்கு எதிரில் உள்ளதாகும்.



னது மகன்), இராச ராசன் I, கங்கை கொண்ட சோழன், முதற்குலோத்துங்கன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராச ராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராச ராசன் முதலான சோழ மன்னர்களுடைய கல்வெட்டுக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் விசயநகர வேந்தனுகிய இரண்டாவது தேவராயனது கல்வெட்டு ஒன்று உண்டு.

இவ்வாலயத்தில் சற்றேறக்குறைய நூறு கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளெல்லாம் அக்காலத்திய தமிழ் வேந்தர்களாகிய சோழர்களும், அவர்களது அமைச்சர்களும், படைத் தலைவர்களும், பிறரும் புறம்பியத் தெம்பெருமானுக்கு நித்திய நைமித்தியங்களுக்கும், திருநுந்தா விளக்குகளுக்கும் நிபந்தங்கள் விடுத்ததையும், பல அணிகலன்கள் கொடுத்ததையும் விளக்குகின்றன. இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்கின் தமிழகத்தின் வரலாற்றை முறையாக ஆராய்ந்தறிய விரும்பும் வரலாற்று ஆராய்ச்சியாளர்க்கு எத்துணையோ அரிய செய்திகள் எளிதில் கிடைக்குமென்பது திண்ணம்.

இத்தலத்தைப் பற்றிச் சில செப்பேடுகளும் உள்ளன. இச் செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் அறியக் கிடக்கும் சில உயரிய செய்திகளை அடியிற் குறிப்போம்.

செப்பேடுகளால் அறியப்படும் செய்திகள் :—திருவாலங்காட்டுச் செப்பேட்டினுலும், உதயேந்திரச் செப்பேட்டினுலும், திருப்புறம்பியத்தில் ஒரு பெரும்போர் நிகழ்ந்தசெய்தி வெளியாகின்றது. சோழ மன்னனுகிய, முதலாம் ஆதித்தன், பாண்டியன் இரண்டாம் வரகுணன், சேரன் தாணுரவி, ஆகிய மூவரும் பல்லவ வேந்தனுகிய அபராசித விக்கிரம வர்மனையும், அவனுக்குத் துணையாகப் போந்த கங்க அரசனுகிய இரண்டாம் பிருதுவிபதியையும் திரும்புறம்பியப் போரில்

வென்று புறங்காட்டி ஓடச்செய்தனர். இரண்டாம் பிருதுவிபதி இப்போரில் கொல்லப்பட்டான்.

இப்போரின் பயனாக முதலாம் ஆதித்தன், சோழ மண்டலத்திற்கு அரசனானான். கி. பி. 880க்கு அணித்தாக இப்போர் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்துதேச சரித்திர நிகழ்ச்சியில் பிளாசி யுத்தம் எத்துணைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றதோ அத்துணைச் சிறப்புடையது இப்புறம்பியப் போரென்பது நன்கு அறியத்தக்க தொன்றாம். உதிரம் படிந்த தோப்பும்* பிருதுவி பதியின் நடுகல் அமைந்ததோர் சிறுகோயிலும்* புறம்பியப் போரைத் தற்காலத்தார் நினைவு கூர்தற்கு ஏற்ற சின்னங்களாக இன்றும் நிலைபெற்றுள்ளன. எனவே, தமிழக வரலாற்றில் குறிக்கத் தக்க பெருமைவாய்ந்தது இவ்வூர் என்பது ஈண்டு அறியத் தக்க தொன்றாம்.

கல்வெட்டினால் அறியப்படும் செய்திகள் :—இவ்வாலயத்திலுள்ள கங்கை கொண்ட சோழனது 16-ம் ஆண்டைய கல்வெட்டு ஒன்று இவ்வாலயத்திற்கு †ஆதித்தேச்சுரம் என்ற பெயர் உண்டென்பதைக் கூறுகின்றது. முதற் பராந்தக தேவரது கல்வெட்டு ஒன்றும் இதை வலியுறுத்துகின்றது. இவ்வாலயத்துத் திருவிமானத்தின் அடிப்பாகங்களில் செதுக்கப்பட்டுள்ள படிமங்கள் இவ்வாதித்த சோழ மன்னனது புகழுக்கும் சிற்ப நுணுக்கத்திற்கும் ஒரு எடுத்துக் காட்டாய் இலங்குகின்றன. எனவே, முதலாம் ஆதித்தனது கோயில் அமைப்பு எவ்வாறுள்ளது என்று ஆராயப்புகுவார்க்கு இவ்வூர் ஆலயம் பெரிதும் பயன்படும்.

*இவைகளை இஞ்ஞான்று மக்கள் முறையே உதிரம்பட்டித் தோப்பு, பகவதி ஐயனார் கோயில் என்று வழங்கி வருகின்றனர்.

†S. I. I. Vol. vi. page 9 line 55.



இவ்வூர் முதல் ஆதித்தன் காலத்தில் அண்டாற்றுக் கூற்றத்து உட்பட்டிருந்தது. இதற்குப் பராந்தகச் சோழ சதுர்ப்பேதி மங்கலம் என்று ஒருபெயரும் உண்டு. முதலாம் இராசராச மன்னன் காலத்தில் இவ்வூர் இராஜேந்திரசிங்க வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய ஒரு தனியூராக இருந்து வந்துள்ளது. விக்கிரம சோழன் காலம்முதல் பிற்காலத்துச் சோழர்கள் காலம் வரை இவ்வூர் இன்னம்பர் நாட்டிற்கு உட்பட்டதாக இருந்து வந்துள்ளது.

முதலாம் இராசராச மன்னனது 13-ஆம் ஆண்டைய கல்வெட்டில் குளக்குடைய வேளான் குவலயசுந்தரன் என்று ஒரு தலைவன் பெயர் காணப்படுகிறது. இதுவரை ஆராய்ந்தவரையில் இம்மன்னனுடைய தலைவர்களில் (Chieftains) இப்படிப்பட்ட பெயர் காணப்படவில்லை. எனவே, முதலாம் இராசராச மன்னனது தலைவர்களில் இக்குவலய சுந்தரனும் ஒருவன் என்று கொள்ளல் வேண்டும். இம்மன்னன் காலத்து, திருப்புறம்பியம் வானவன் மூவேந்த வேளான் சிவபெருமானுக்குப் பூசை நைவேத்தியங்களுக்கு வேண்டுவன எல்லாம் குறைவறச் செய்திருக்கின்றான்.

ஒன்பதாந் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவராகிய முதற் கண்டராதித்த சோழரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியார் இக்கோயிலுக்கு நிபந்தம் அளித்துள்ளார். [இவ்வம்மையார் ஒரு கேரள அரசனது அருமை மகளாவர். இவருக்குக் குலமாணிக்கம் என்று வேறு பெயரும் உண்டு. இவ்வம்மையாருடைய சிவபத்தியின் மாண்பு பெரிதும் போற்றற்குரியதாகும். தமிழ் நாட்டிலுள்ள பல கோயில்கள் இவ்வம்மையாரால் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. இவ்வம்மையார் முதலாம் இராசராச மன்னது 16-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழல் எய்தியுள்ளார். இவ்வம்மையார் தம் காலத்தில் ஐந்து சோழ அரசர்களுடைய மகுடாபிஷேகத்தைப்

பார்த்திருக்கிறார். இவ்வளவு காலம் இவ்வம்மையார் இருந்தது தமிழ் நாடு செய்த தவப்பேறேயாம்.]

இவ்வாலயத்திலுள்ள மூன்றாங் குலோத்துங்கனது கல்வெட்டு ஒன்று முத்து முளைக்கன்று, அறம்பயந்த விநாயகர் என்று இரு விநாயகர்களைக் குறிப்பிடுகின்றது. இவர்கள் பள்ளியறை நாச்சியாருக்கு எதிரிலிருப்பவரும், சந்நிதிக்கு எதிரில் கீழவீதியில் இருப்பவருமாகிய இரு விநாயகர்களாக இருத்தல் வேண்டும். இவ்விரு விநாயகர்களில் இவருக்கு உரித்து இப்பெயரென்று இதுபொழுது திட்டமாகக் கூறுவதற்கில்லை.

இவ்வேந்தனது மற்றொரு கல்வெட்டு இவ்வூரில் ஆண்டார் கடியாபரணர் மடம் என்று ஒரு மடம் இருந்ததைக் குறிப்பிடுகிறது. இதுபொழுது சந்நிதித் தெருவில் வடசிறகிலுள்ள மடம் இதுவேயாகும்.

இனி இம்மூன்றாங் குலோத்துங்கனது 36-ஆம் ஆண்டிலே, வீதிவிடங்க விழுப்பரையன், அவனுடைய உடன்பிறந்தான் அகில நாயக விழுப்பரையன்என்றஇரு வர்களும் இச்சிவாலயத்தில் திருவலஞ்சுழி உடையார், புற்றிடங்கொண்டார் என்ற இருவர் படிமங்களையும் முதற்பிராகாரத்திலும், அறம் உரைத்த நாயனாரை (தக்ஷிணாமூர்த்தி) மூன்றாம் பிராகாரத்துத் திருவாசற்படிக்கு அண்மையிலும் எழுந்தருளிவித்ததற்கு, மூன்றாம் இராச ராசன் காலத்தில் நிபந்தங்களை விட்டிருக்கிறார்கள். இச்செய்தியை இம்மூன்றாம் இராசராச மன்னனது 20-ஆம் ஆண்டைய கல்வெட்டு உணர்த்துகிறது. எனவே, இச் சிவாலயத்திற்கு மூன்றாம் இராசராச மன்னனது காலத்தில் மூன்று பிராகாரங்கள் இருந்திருத்தல் வேண்டும். இதுபொழுது இரண்டு பிராகாரங்களேயுள்ளன. மூன்றாம் பிராகாரம் எப்பொழுது அழிவுற்றது என்பது புலனாகவில்லை.



சனகர் முதலிய இருடிகள் நால்வர்க்கும் அறம்பயன் உரைத்தருளிய இடம் இப்புறம்பியமாகும். இஃது "நால்வர்க் கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்" "புறம்பயமதனி லறம்பல அருளியும்" என்ற சமயகுரவர்களது திருவாக்குகளால் இனிது உணரப்படும். இது காரணமாக இங்கு அறம் உரைத்த நாயனார்க்குத் தனிக்கோயில் எடுக்கப்பட்டதாதல் வேண்டும்.

"ஒரு நீசனுக்கு ஸ்வாமி அந்த ரூபமாய் வெளிப்பட்டு அநுக்கிரகித்தனர்" என்று சிவஸ் தலமஞ்சரி (பக்கம் 183. மூன்றாம்பதிப்பு) கூறுவது மறுக்கத்தக்கதாகும்.

மூன்றாம் குலோத்துங்க மன்னனது காலத்தில் திருவலஞ்சுழி உடையார், புற்றிடங்கொண்டார், என்ற இருவர்படிமங்களை இச்சிவாலயத்தில் எழுந்தருளிவித்து நிபந்தங்கள் விட்டிருப்பதுபோல, திரிபுவன வீரதேவர்க்கு யாண்டு 35 - ல் திருப்புறம்பிய முடையானான செம்பியன் பல்லவரையன் குடந்தைக் கீழ்க்கோட்டமுடையார் கோயில் முதல் பிராகாரத்துக் கிழைத் திருமாளிகையில் திருப்புறம்பிய முடையார் படிமத்தை எழுந்தருளிவித்துப்பூசைக்கும் அமுது படிக்கும் நிபந்தங்கள் விட்டிருக்கிறான். இச்செய்தி குடந்தைக் கீழ்க்கோட்டத்துக் (கும்பகோணம் நாகேச்சுரரது கோயில்) கல்வெட்டால் புலனாகிறது.

இதனால் ஒருவன் தனக்குப் பற்றுள்ள வேற்றூரிலுள்ள இறைவனைத் தன்னூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளிவித்து வழிபாடாற்றும் வழக்கம் உண்டென்பது தெரிகிறது.

இவ்வூரில் மூன்றாம் இராச ராசனது காலத்தில் தாமோதர விண்ணகரம் என்று ஒரு பெருமாள்கோயில் இருந்ததாக, இம்மன்னனுடைய கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது.

அவ் விண்ணகரம் இதுபொழுது இல்லை. இவ்விண்ணகரம், இதுபொழுது ஊருக்கு மேற்கில் பெருமாள்கோயிலடி என்று வழங்கும் இடமாக இருக்கலாம். 1311-ல் மகம்மதியர் படையெடுப்பு நிகழ்வுற்ற காலங்களில் இவ்விண்ணகரம் சிறியதாய் இருந்தமையால் இடிக்கப்பட்டிருத்தல்வேண்டும். இவ் விண்ணகர ஆழ்வார் படிமம் ஊருக்குக் கீழ்பாலுள்ள மண்ணியாற்றின் படித்துறையில் (பூசப் படித்துறையில்) வைக்கப் பட்டிருக்கிறது.

விழாக்கள் :—இவ்வாலயத்தில், தைப்பூச விழா, பங்குனி விழா, திருவேட்டை விழா, அரிவாட்டாய நாயனார் திருநட்சத்திர விழா ஆகிய இவைகளே நடத்தப்பட்டு வந்தனவென்று கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன.

செந்தமிழ்ச் சொற்கள் :—இவ்வாலயக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் ஓடேந்திச் செல்வர் (பிட்சாடனர்) கூத்தப்பெருமாள் (நடராஜர்) அறம் உரைத்த நாயனார் (தட்சிணாமூர்த்தி) என்பனபோன்ற செந்தமிழ்த் தொடர்கள் நம் உள்ளத்தைப் பிணிக்கும் தன்மையனவா யிருக்கின்றன.

மற்றொரு முறை ஏனைய கல்வெட்டுக்களையும் ஆய்ந்து அவைகளிற் கண்ட உயரிய செய்திகளைக் குறிப்பிடுவாம்.

## திருவிழாவில் சமய போதனை

திருவொற்றியூரில் மகிழடி சேலவை யன்று வழக்கம்போல் சமய போதனை நடந்தது. திருவாளர்கள் - கி. குப்புச்சாமி முதலியார், சபாபதி முதலியார், சிதம்பரசாமி பாண்டியர் முதலியோர் பேசினர். திருமயிலாப்பூரில் நடைபெறும் திருவிழாவிலும் முக்கிய நாட்களில் வழக்கம்போல் சமய போதனை நடைபெறும்.

# ஆலமுண்ட நீலகண்டன்

[S. இராமலிங்கம், நெல்லை]

**பா**ர்க்குமிடமெங்கும் நீக்கமற நிற்கும் பரம்பொருளைப் பற்றி, பழுதெல்லாம் புரிந்து பொழுதெல்லாங் கழிக்கும் பாவியேன் எழுதுவது பொருத்தமற்றதே யெனினும் ‘பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே’ யாதலால் அவனது பெருமை பேசின் அடியேனது சிறுமை நீங்கும் என்ற எண்ணத்தால் சிலவற்றை இங்கு எழுதலுற்றேன். பெருமை பேசப்புகுந்தவிடத்து அவனுக்கு அது சிறுமையாகவே முடிந்திடினும், ‘முத்தமிழால் வைதாரையும் அங்குவாழ வைப்போன்’ என்னும் அருணகிரியாரின் கருணை வாக்கைக் கருத்திலிருத்திச் சிறிது குறிப்பிடுவாம்.

ஆதியும் நடுவும் அந்தமுமின்றி, அறிவுக்கு அநாதியாய், ஐந்தொழிற்கும் அப்புறமாய், அருமறைகளுக்கும் ஓதவும் எட்டாது உயர்ந்து நிற்குங் கடவுள் அருட்பெருஞ் சோதித் தனிப்பெருங் கருணையாளர்; அடியார்க்கு எளியவர்; அருளே வடிவானவர். ஆனந்தமோனன்; அருட்குருநாதன். நம்பினோரைக் காக்குந் தம்பிரான். ‘பக்தி வலையிற் படுவோன்’ என்று முத்தர்களால் பாடப் பெற்றவர். தாயிழந்து தயங்கிக் கிடந்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாய் நின்று பால் கொடுத்தவர். அதனால், அகில வேதமும் ஆகம பேதமும் “சகல சீவ தயாபரன்” என்று முழங்கலாயின.

பிட்டு விற்றுவரும் நரையாட்டி யொருவள் பரிவுக்கிரங்கிக் கூலியாள் வடிவங்கொண்டு வந்து, அவள் கொடுத்த பிட்டை வாங்கித் தின்று, வைகை நதிக்கரையை அடைக்கச்

சென்று, ஆங்கு மண் சுமந்து மன்னவன் கைப்பிரம்பால் அடிபட்டுப் புண்சுமந்த பொன் மேனியானார். பழகிய சுந்தரரது மொழியை மறுக்கமாட்டாமல், பரவை மனைமீதிலன்று ஒருபொழுது தூது சென்றார். இன்னும் அடியவருக்காக இவ்வரனார் செய்த அளியின் பெருமை அளவிடலரிது.

அமிர்தம் அருந்தி இறவாமல் இருக்கக் கருதிய அமரரனைவரும் அரனை வணங்காமல் அரியை வைத்துத் தாம் கருதிய வினையை இனிது முடித்துவிட எண்ணித் திடமனங்கொண்டு தம்முடல் வருந்தத் திருப்பாற்கடல் கடைந்தனர். அத்தருணம் கடலிலிருந்து விடம் மண்டி எழுந்தது. அந்நஞ்சைக் கண்டு அஞ்சிய தேவர்கள் அரனிடஞ் சென்று அவன் தாள் வணங்கி நின்று, "எல்லாம் அறிந்து எங்கும் நிறைந்து என்றுமுள்ள பரம்பொருளே! எமதுடல் வருந்தக் கடல் கடையுங்காலை, கடுவிடம் மண்டி எழுந்தது! அவ்வனல் விடமானது உயிர்கள் அனைத்தையும் கொன்றுவிடும்போல் தோன்றுகின்றது! இன்ப வடிவாம் இறைவனே! இவ்வனல் விடத்தை மாற்றுந் தன்மையர், உன்னையொழிய வேறு ஒருவருமில்லையென உணர்ந்தேம். ஆதலால், ஆதி பகவனே! இக்கொடிய விடத்தை எடுத்து அருந்த வேண்டுதும். இவ்வெய்யதோர் விடத்தை இங்கு விட்டனையாயின், எவரேனும் உய்வரோ? முடிவிலா முதல்வ! உன்னடி பணிந்தனம்; அடியரேம் உய்யுமாறு இதனை அருந்தவேண்டும்" என வேண்டி நின்றார்கள்.

இவ்வாறு குறையிரந்து அன்று அவர்கள் நின்றதைக் கண்ட அமலன் மனமிரங்கி விரைந்து வந்து விடத்தை எடுத்து உட்கொண்டான். அன்ன திறத்தினை அமரர்களனைவருங் கண்டு அளவிடலரிய ஆனந்தங் கொண்டு, "அருளே வடிவாய் அமைந்தோய்! அண்டினோரை ஆதரிக்கும் ஆண்டவ



னாகிய நீ, எங்கள் பொருட்டு நஞ்சையும் ஒரு சமயம் உண்டாய் என்பதனை மன்பதைகள் உணரும் வண்ணம் நின் கண்டத்தில் அவ்வல்விடத்தை நிறுத்தி அருள் புரியவேண்டும்" என்று அடி பணிந்து வேண்ட, ஆலமுண்ட அவரும் அன்று நீலகண்டராக நின்று அருள் புரிந்தனர். அப்பொழுது தேவர்களனைவரும், "இறந்தே மீண்டும் பிறந்தோம்; மறைந்தே இன்று தோன்றினோம்" என்று ஆடிப் பாடி அகங்களிப் பாராயினர்.

பிறர் பொருட்டு உயிர்க்கிறுதி பயக்கத்தக்க விடத்தையும் உண்ட பரமனைக் "கருணையங் கடல்" என இயம்புவதும் இழுக்காமோ? அன்று அரனார் ஆலமுண்ட நீலகண்டராக ஆகாவிடில், மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே? இந்திரன் செங்கோலெங்கே? வானோர் குடியெங்கே? கோலஞ்சேர் அண்டமெங்கே? அவ்வண்டத்து அரும் பொருள்கள் எங்கே? யாவும் ஒருங்குடன் அடியோடு அழிந்து ஒழிந்திடாவோ?

இவ்வரலாற்றால், "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்" என்னும் மெய்ம்மைக்கு இறைவன் ஓர் மெய்யுருவாக இலங்குகின்றார் என்பது இனிது விளங்கும். இவ்வருட்பெருங் கடலை-பெற்ற தாயினும் சாலப் பரிவுடைய பரமனை எண்ணித் துதியாதார் எத்தனையோபேர் இம்மண்ணில் இருக்கின்றார்கள். அன்னார்களை நோக்கித் தாயுமான அடிகள்,

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வெளியாய்க் கிடக்குதையோ! இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.!"

என்று கூவி அழைக்கின்றார். சிவபோகமெனும் பேரின்ப

வெள்ளத்துள் மூழ்க நாடித் தேடி ஓடிவருவீர்! நீவிர் ஓடி வருவீர்!! முன்னர், பிரமனும் தக்கனும் பரமனை வணங்காமையால், பிரமன் ஒரு தலையை இழந்தான்; தக்கனும் தன்னொரு தலையை இழந்து இழிந்த ஆட்டுத் தலையை அடைந்தான். அந்தோ! இதனை நீவிர் இனிதுணர்ந்தும் 'அருமறைகள் புகழ்ந்து மகிழ் அவன்றாளை' வணங்காமல், ஆசை நோயால் கருமமிகப் புரிந்து, பவக்கடலில் வீழ்ந்து மனங்கவல்வதென்னே !

## சமாஜ 29-ம் ஆண்டு விழாக் கணக்கு

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| திரு. அ. சொ. இராஜ கோபால செட்டியார் நன்கொடை | 429- 9-7 | அச்சுக்கூலி | 110- 0-0 |
| | | பிரயாணச் செலவு | 183-11-6 |
| சாமான்கள் விற்று முதல் | 139-13-6 | காகிதம் முதலியன | 26- 0-0 |
| *வசூல் மூலம் | 895- 8 6 | தபால் வகை | 14- 2-9 |
| | | ஆட் கூலி | 41- 6-6 |
| ஆ | 1464 15-7 | நாடகம் | 58-10-0 |
| | | பந்தல் | 163- 0-0 |
| | | புகைப்படம் | 29- 2-0 |
| | | உணவு | 785- 7-7 |
| | | சில்லரையாக | 53- 7-3 |
| | | ஆ | 1464-15-7 |

*வசூல் விவரம் ஆண்டு அறிக்கையாக வசூல் நிகழ்ந்த இடத்து வழங்கப்படும்.

10-3-1935.

தி. கி. நாராயணசாமி,
வரவேற்புக் காரியதரிசி.

## சமாஜ வரவேற்புத் தலைவர்



**சைவத்திருவாளர் - அ. சோ. இராஜகோபால செட்டியார்.** நமது சமாஜ விழாவைத் திருவதிகையில் வரவேற்புத் தலைவராகப் பணிபுரிந்து மிகச்செம்மையாக நடத்தியசீலர். திரு. சொக்கலிங்க செட்டியாருடைய தவப் புதல்வராய் 1889ஆம் தோன்றியவர். திருவதிகைக் கோயிலில் பல திருப்பணிகள் செய்பவர். ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் சைவப்பற்று முடையவர். சமாஜ விழாவுக்கு நானூறு ரூபாவுக்குமேல் உதவிய சமாஜ போஷகர். இவர் நீடூழி வாழி.



திருவெண்ணெய்நல்லூர்
மெய்கண்டார் சந்நிதி

# தூத்துக்குடித் தலைமைப் பேருரை

[தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்
51-ம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த
திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் நிகழ்த்தியது]

அன்புடையீர்!

அறிவாற்றல்களிலும், தமிழ்ப் புலமையிலும், சமய ஞானத்திலும் எளியவனாகிய என்னை இப்பேர் அவையின் கண் தலைமை வகிக்கும்படியாக ஆணையிட்டீர்கள். என்னையும் ஒரு பொருட்படுத்தி இவ்வரும் பெரும் சபைக்கு அழைத்தீர்கள். உங்கள் பெருந் தகைமைக்காக என் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றேன். சில ஆண்டுகளின் முன்னர் இருமுறை, இச்சபைக்கு வந்து சில வார்த்தைகள் பேசும்படியான உரிமையை முன்னமேயே எனக்குத் தந்திருக்கின்றீர்கள். இவ்வாண்டு அவைத் தலைமை வகிக்கும் ஒரு பெருங் கடமையையும் என்மீது சுமத்தி இருக்கின்றீர்கள். அத்துணை ஆற்றலுக்கு எளியேன் ஏற்றவன் அல்லன் என்று முதன் முதலாக வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்னிலும் புலமை, அறிவு, சமய ஒழுக்கம் இவைகளில் சிறந்தவர்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கவும், என்னை அழைத்து இப்பெருங் கடமையை எனக்கு அளித்திருப்பதற்கு என்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பேதான் காரணம் என்று நான் எண்ணுகின்றேன். ஆற்றல் இல்லாவிடினும் இறைவன் பெருங் கருணைத் திறத்தினல் ஒருவாறு என் கடமையை நிறைவேற்றக் கூடும் என்று தெளிந்து முன் வந்திருக்கின்றேன்.

அன்பர்காள் ! செந்தமிழ் வழங்கும் தென்னாட்டிலேயே இத் திருமந்திரமா நகரின்கண் நிறுவப் பெற்றிருக்கும் இச் சைவசித்தாந்த சபை மிகப் பழைமை பெற்றது என்பது உலகறிந்தது. இச் சபையார் சென்ற ஆண்டு பொன் விழா நடத்தித் தங்கள் அரும் பெரும் தொண்டை உலகினில் தெரிவித்துள்ளார்கள். நிரந்தரமாக நாடோறும் செய்யும் சமயப் பணியே யல்லாது, ஆண்டுகள் தோறும் விழாக்கள் நடாத்தி அவ்விழாக்களின் போழ்து அரும்பெரும் புலவர்களைக் கொண்டு தமிழ்மொழி, சைவசமயம் இவைகளைப்பற்றி அருமையான சொற்பொழிவுகள் ஆற்றச் செய்து வருகின்றார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் அச்சொற் பொழிவுகளை அகமகிழக் கேட்டுத் தம் வாழ்நாட்களை ஈடேற்றிக் கொள்ளுகின்றார்கள். இத்துணை அரும் பெரும் சமயப் பணி செய்து வரும் இச் சைவசித்தாந்த சபையானது, திருஞான சம்பந்தப் பெருந்தகையார் மடாலயத்தின்கண் நிறுவப்பெற்றிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். அப்பெருந்தகையாருடைய பெரு வாழ்வின் நோக்கங்களை முன்னிட்டு இச்சபையார் தம் திருப்பணியைச் செய்து வருகின்றார்கள் என்று எண்ணுகின்றேன். ஆகவே, என் அவைத் தலைமையின் முன்னுரையாக அப்பெருந்தகையார் மண்ணுலக வாழ்வில் நடித்துக் காட்டி இந் நிலவுலகுக்கு உதாரணங்களாக அளித்திருக்கும் அருஞ் செயல்களைக் குறிப்பிடுவது நலம் என்று கருதி அவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிட எண்ணுகின்றேன். அவ்வாறு குறிப்பிடுகையில் அவ்வாழ்க்கைச் செயல்களால் நாம் அறிந்து செய்யவேண்டிய முறைகள் என்ன என்பதையும் குறித்து விளக்கலாமென்று எண்ணியிருக்கிறேன்.



ஆக்கிரக சைவம் (முற்படுசைவம்)

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்து அழுத' பெரியார் திருஞான சம்பந்தப் பெருந்தகையார் ஆவார். அவ்விதம் அப்பெருந்தகையார் அழுத காலம் எப்படி இருந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம். 2500 ஆண்டுகளுக்கு முன் அவதரித்த புத்தர் பெருமானும், மகா வீரரும் புத்த ஜைன சமயங்களை ஆரிய நாட்டினில் நிலை நாட்டினார்கள். அப்பெரியார்கள் போதித்த சமயக் கொள்கைகள் பரிசுத்தமானவையே. என்றாலும், ஆண்டுகள் செல்லச் செல்ல அச் சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சீடர்களும் பாமரர்களும் அக்கொள்கைகளினுடைய உண்மைப் பொருள்களை மறந்து வெளிவேடங்களைப் பெரிதாகக் கொண்டு மதிமயங்கலானார்கள். மதிமயக்கத்தினாலும் மூட நம்பிக்கைகளாலும் ஆபாசங்களில் அகப்பட்டு இகத்திற்கும் பரத்திற்கும் உதவாத நிலையில் படிய ஆரம்பித்தார்கள். ஏறக்குறைய 1000 ஆண்டு அளவில் தமிழ் நாடுகளிலும் பரந்து வந்த அச்சமயங்கள் தமிழ் மக்களை உண்மை நெறிகளிலிருந்து விலக்கி மூடக் கொள்கைகளில் வீழ்த்திவிட்டன. அவ்வித நெருக்கடியான சமயத்தில் நமது ஞானசம்பந்தப் பெருந்தகையார் தமிழ் மக்களை உய்விக்க அவதரித்தார்.

நாட்டில் மக்கள் அறிவின்மையிலும், மூடப் பழக்கங்களிலும் ஆழ்ந்து கிடக்கும்போது அவர்களை நல்வழிக்கு மீட்பது மிகவும் கடினம். அறியாமையை ஒழித்து மூடத் தன்மையைக் கண்டித்து உண்மை நெறியைப் புகுத்தவேண்டியிருக்கும். அவ்விதம் செய்வதற்கு மென்மையான வழிகள் பயன்படா. வலிமையான முறைகளையே கைக்கொள்ள வேண்டிவரும். அவ்வாறான வலிய முறைகளைக் கைக்கொண்டதினால்தான் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அக்

காலத்து ஈனக் கொள்கைகளை அழித்து சைவத் துறைகளை விளங்கச் செய்தார். அதனால்தான் நீடு வாழக்கூடிய வெற்றி சைவ நெறிக்குக் கிடைத்தது.

பாண்டிய நாட்டில், அரசன் முதற்கொண்டு குடிகள் எல்லாம் சமணராகிவிட்டார்கள். சைவ அன்பு பூண்டோர் வெளிப்படையாகத் தம் சமயப் பணிகளைச் செய்யவும் அஞ்சியிருந்தார்கள். சைவத்தில் அன்பு மிகுந்திருந்த அரசி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் சம்பந்தப் பெருமானை அழைத்தார்கள். அதைக் கேட்ட அப்பர் சுவாமிகள், முந்தியே சமணர்களால் ஒறுக்கப்பட்டவர் ஆதலால் அங்கு செல்வது நலம் அல்ல என்று மறுத்தார்கள். ஆனால், சம்பந்தப்பெருந்தகையாரோ அப்படிப்பட்ட கொடியநிலைமை வாய்ந்த இடத்திற்குச் சென்றல்லவோ சைவ உண்மையை நிலைநாட்டவேண்டும் என்று கூறித் திட வீரத்துடன் சென்றார். அங்கு சென்று சமணர்களுடைய சூதுகளுக்கும் வஞ்சனைகளுக்கும் சிறிதேனும் அஞ்சாமல் சமயப் போர்புரிந்து வென்றார். வென்றது மாத்திரமோ, புன்சமயத்தை வேரோடு அறுக்கவேண்டுமென்று எண்ணினார். அவ்வாறே செய்யவும் செய்தார். சமணக் குரவர்களெல்லாம் கழுவில் அழிந்தார்கள். அவர்கள் பாழிகளெல்லாம் பாழடைந்தன. ஆகவே, அவர் புறச் சமயத்தைத் தொலைத்துத் தம் சமயத்தை நிலைநாட்டவல்ல பரசமய கோளரியாக விளங்கினார் என்க.

பெருந்தகையாரது இவ்வரிய செயலினால் அன்றோ சைவ சமயம் அக்காலத்தில் மேம்பாடு அடைந்தது? தற்காலத்திலும், சைவ சமயத்தில் நமக்கு உண்மையான பற்று இருக்குமாகில் நாமும் அப்பெருந்தகையாரைப் பின்பற்ற முயலவேண்டுமல்லவா? மூலை முடுக்குகளில் ஒடுங்கிக்கொண்டு ஐந்தாறு பெயர்களுக்கு ஒளிமறைவாகப் பாடம் கற்றுக்கொடுத்து வந்தால் சைவ சமயம் எவ்வாறு பரவும்? ஏனைய சமயத்தோர்கள் எவ்வாறு தத்தம் சமயங்களைப் பெருக்கி வருகிறார்கள்? விவிலிய நூலார் தம் நூலில் பற்றில்லாத ஏனைய சமய மாணவர்களுக்கும் தம் நூலைக் கட்டாய பாடமாக வைத்துப் போதித்து பரிசுகளும் ஈந்து அவர்களை இழுக்க முயற்சிகள் செய்து வருவதில்லையா? சேரிகள்தோறும் சென்று இசைக்கருவிகளுடன் கீர்த்தனைகள் பாடிப் பாமரர்களை மகிழ்வித்து மயங்கினவர்களை இழுத்துக் கொள்வதில்லையா? பலவித விருப்பங்களைக் காட்டி அவ்வகைகளிலாவது சிக்கவைப்பதில்லையா? முகம்மதியர்களும் பலவகைப் பிரயோகங்களினாலே பல்லாயிரக் கணக்கான மக்களைத் தம் சமயத்துள் சேர்க்கவில்லையா? சைவ சமயிகள் மாத்திரம் அவ்வாறு செய்யாமையாலன்றோ, சைவ சமயத்தினால் மக்கள் தகுந்த பயன் பெறாமல் போய்விடுகிறார்கள். சம்பந்தப் பெருமானை சமயாசிரியராகக் கொண்ட நாம் அவரைப் போன்றே சமயக் கொள்கைகளை வலியுறுத்திச் சமயத்தை ஆக்கிரகமாகப் பரவச் செய்யவேண்டுவது நமது கடமையல்லவா?



**ஆகர்ஷ சமயம்**

பாண்டிய நாட்டில் சமணர்களை வென்ற பிறகு சைவ உண்மையை அறிந்து கொண்ட பாண்டிய அரசன் சைவத்திற்கு வர எண்ணினபோது சம்பந்தப் பெருந்தகையார் திருநீறு கொடுத்து மகிழ்வுடன் அவனை ஏற்றுக் கொண்டார். அரசனைப் பின்பற்றிச் சமண மதம் அடைந்த குடிகள் எல்லாம் சைவ சமயத்தில் புகுந்தார்கள். சமண அடிகள்மாரும் சிலர் கழுவில் ஏறப் பயந்தவராய் சைவத்தில் புகுந்தனர். அன்னார்களையும் பெருந்தகையார் விலக்கவில்லை. ஆகவே, அந்நாளில் சமயப் பிரவேசம் எளிதில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அச்சம்பவத்திற்குச் சிறிது காலத்திற்கு முந்தித்தான் தருமசேனரா யிருந்த மருணீக்கியார் அவரது தமக்கையா

ரான திலகவதியம்மையாரால் சைவராகித் திருநாவுக்கரசரானார்.

தமிழ் நாட்டில் மட்டோ, வடநாட்டிலும் கூட இவ்விதச் சமயப்பிரவேசம் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. சம்பந்தப்பெருமான் காலத்திற்கு ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்தி, வட நாட்டின்மீது மத்திய ஆசிய மிலேச்சர்களான ஹூணர்கள் படை எடுத்தார்கள். *அவர்களின் தலைவனான தோரமானன் என்போன் மிகக் கொடியதோர் கொடுங்கோல் மன்னன். செழிப்பான நாடு முழுவதையும் அழித்து ஆரிய மக்களைச் சித்திர வதை செய்து நாட்டைக் கைப்பற்றி ஆண்டான். ஆனால் அவன் வந்த சில நாட்களுக்குள் இந்

---

*மத்திய இந்தியாவில் குவாலியர் சமஸ்தானத்து பில்ஸா ஜில்லாவில் உள்ள பிஸ்நகர் என்ற கிராமத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டில் (காலம் சுமார் 150 கி. மு.) கிரேக்க யவனர்கள் **பாகவதர்களாகி** விஷ்ணு ஆலயங்களின் முன் கருட கம்பங்களை நட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட அரசன் 175—135 கி. மு. ல் ஆண்ட பேக்டேரிய நாட்டு இந்து கிரேக்க அரசனான ஆண்டியால் சிடாஸ் என்பவன். அவனுடைய தூதனான ஹெலியாடோரஸ் என்பவன் வாசுதேவ ஆலயத்தின் முன் கருட துவஜம் தாபித்தவன். அக்கல்வெட்டு பிராகிருத மொழியில் இருக்கிறது. அதன் மொழி பெயர்ப்பு :—

"சங்கஸ்ய நாட்டு அரசன் காசி புத்ர பகபத்ரனிடம் அண்டியால் சிடாஸ் மகாராஜனிடமிருந்து கிரேக்கத் தூதுவனாக வந்தவனும் தகோக சீலத்துக்குடியும் தையோன் மகனும் ஒரு பாகவதனும், ஆன ஹிலியா டோரஸ் என்பவனால் இங்கே தேவ தேவனான வாசுதேவனுடைய கருடத் துவஜம் கட்டப்பட்டது."

இதனால் கிரேக்கர்கள் இந்து மதம் தழுவியது காண்க.

தோரமானன்—கி. பி. 500—502.

மிஹிரகுலன் கி. பி. 502—542.

பீட்டிதேவன் (விஷ்ணு வர்த்தனன்) கி. பி. 1115—1141.



நாட்டுச் சமயங்களை ஆராய்ந்து அவற்றின் மேன்மைகளை வியந்து அதில் சேர்ந்து கொண்டான். அக்காலத்து மதாச்சாரியர்களும் அவனை ஏற்றுக்கொண்டு க்ஷத்திரியன் ஆக்கிக் கொண்டார்கள். அவனுக்குப் பின் வந்த அவன் மகன் மிகிரகுலன் பெரிய பராக்கிரமசாலி. அவனையும் க்ஷத்திரியனாக அக்காலத்துப் புரோகிதர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

இவர்கள் மாத்திரமோ! சம்பந்தர் காலத்திற்குச் சிலநூற்றாண்டுகளுக்குப் பின்வந்த ஹாய்சள குலத்துப் பிட்டிதேவன் என்ற ஜைனனை இராமாநுஜர் விஷ்ணு வர்த்தனன் என்ற வைஷ்ணவ அரசனாக மாற்றிக்கொள்ளவில்லையா? நம்நாட்டுச் சரித்திரத்தில் இவ்விதமான சமய மாறுதல்கள் ஏராளமாக நடந்து வந்ததினாலன்றோ நமது சமயம் பெருகிக் கொண்டு வந்தது.

ஆகவே, புறச்சமயத்தாரை நம் சமயத்துள் சேர்த்துக் கொள்ளுதல் கூடாத காரியமன்று. சமயாச்சாரியர்கள் முதல் பாமரர்கள் வரை எல்லோராலும் தழுவி ஏற்றுக் கொள்ளப் பெற்றதோர் முறை அது ஆகும். ஆனால் இக்காலத்திலோ, அது தவறான முறையாகக் கருதப்பெற்று வருகிறது. ஏதோ ஒரு காரணத்தினால் நம் சமயத்திலிருந்து விலகின ஒருவன் பின்னர் பச்சாத்தாபப்பட்டு மீண்டும் வரவேண்டுமென்று எத்தனை முயன்றாலும் நாம் சேர்த்துக்கொள்ளுகின்றோமா? ஏன் கூடாது என்பதுதான் கேள்வி. சம்பந்தப் பெருந்தகையாரின் பெருங்கொள்கைகளை நாம் ஆதரித்து அவரைப் பின்பற்றுவோமானால், நம்மிடமிருந்து விலகின நம் சகோதரர்களை மீண்டும் நாம் சேர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். மேலும் புறச்சமயத்தினர்கள் சைவத்தில் பற்றுக் கொண்டவர்களாகில் அன்னாரையும் சேர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு செய்தால்தான் நமது சமயமும் பெருகும். அப்போதுதான் வேதநெறி தழைத்தோங்

கும்; மிகு சைவத்துறை விளங்கும்; பூதபரம்பரையும் பொலியும் என்றறியவேண்டும். அப்போதுதான் சம்பந்தப் பெருமான் புனிதவாய் மலர்ந்தழுததின் நற்பயனும் ஏற்படும். இவ்வுண்மைகளை இனி, எக்காலத்தில் நம் சைவமக்கள் ஏற்றுக்கொள்வார்களோ பார்ப்போம்.

பிரசார சமயம்

சைவ சமயத்தை உலகில் பெருக்கும் எண்ணமும் செயலும் மேற்கொண்ட சம்பந்தப் பெருமான் எவ்வகைகளில் அதனை முற்றுவித்தார் என்பதைச் சிறிது ஆராய்வோம். நாடு முழுவதும் வழி நடந்து சென்று ஒவ்வொரு ஆலயமும் தரிசித்து வணங்கினார். அவருடைய பெருமையைக் கேட்ட நாட்டு மக்களெல்லாம் அவரை அணுகி அவர் பாதம் பணிந்ததன்றி பல்லாயிரவர் அவரோடு கூடவும் சென்றார்கள். அவர் ஏகும் ஊர்களுக்கு அவர் ஏகுவதற்கு முந்தியே அவரைப்பற்றிய கீர்த்தி சென்றது. அவ்வூர் மக்களெல்லாம் அவரது பெருமையை முந்தியே அறிந்தவர்களாகி ஏற்றபடி உபசரிப்பார்கள். இவ்வாறு நாடு முழுவதும் அவரது பிரக்கியாதி வெகு எளிதில் பரவிக்கொண்டிருக்கும்.

ஒவ்வோர் ஆலயத்திற்கும் அவர் சென்றவுடன் முறைப்படி வணங்குவார். கூடவரும் மக்கள் எல்லாம் அவரைப் பின்பற்றி வணங்கிப் பரிசுத்தமாவார்கள். அவ்வவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை வழிபடும்போது திருப்பதிகங்களை அருளிச் செய்வார். அவ்வருள் வாக்கினைக் கேட்ட மக்கள் அன்பு மேலிட்டவர்கள் ஆகி மெய் மறந்து நிற்பார்கள். இதை விட உருக்கத்தக்க வேறு சமய போதனை என்ன இருக்கின்றது?

(தொடரும்)



கும்வழி அன்னியமின்றித் தனக்காதாரமாய் உடனின்று விளக்குஞ் சிவஞானமுந் தனக்கு வியஞ்சகங்களாகலான் அதுபற்றி அவையும் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதூஉம், இருதிறனினு மறிவுளதெனவே ஈரிடத்துங் கேடின்றி அசத்தான் விளங்கி அசத்தையறிவுழி அசத்தின்பாலும், சத்தான் விளங்கிச் சத்தையறிவுழிச் சத்தின்பாலும் அதுவதுவாய் அழுந்துமென்பதூஉம் பெறுதும். இவ்வாறன்றி வியஞ்சகங்களையே பிரமாணமென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களானிகழும் பிரமிதி வேறுபாடும் அவற்றதியல்புகளும் ஈண்டுவிரிப்பிற் பெருகும்; பௌட்கர முதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க.

---

## எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

சூ—ஞானத்தினை யுணருமுறைமையினை யுணர்த்துதனுதலிற்று.

சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

அவ்வான்மாவின் அறிவாவது மேலிருதிறனென்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பாலுளதாய் அசத்தினை யறிந்து நின்றவாறுஞ் சத்தான் விளங்கிச் சத்தின்பாலுளதாய்ச் சத்தினை யறிந்து நிற்குமாறுந் தரிசிக்குமுறைமையினை யுணர்த்துமுகத்தாற் சாதித்தற்குரிய அதிகாரந் தனக்குண்டென மேலைச்சூத்திரத்தானறிந்த ஆன்மாவிற்குச் சாதித்ததனாற் பெறப்படும் பயனும் அதற்குச் சிறந்த சாதனமாவதும் அது வருவாயும் இவையென்பதுணர்த்துதல் இவ்வெட்டாஞ் சூத்திரத்தின் கருத்து.

இதனானே சூத்திரவியையும் இனிதுவிளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—

உயிர் தான் முன்னேசெய்து கொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தாற் றனக்கு அந்தரியாமியாய் இதுகாறு மூண்ணின்றுணர்த்தி வந்த பரம்பொருளே இப்பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து, மன்னவகுமாரனாகிய நீ ஐம்பொறி

களாகிய வேடருட்பட்டு வளர்ந்து நின்பெருந் தகைமை அறியாது மயங்கி யிடர்ப்பட்டாய்; நின்பெருந் தகைமையாவது இவ்வியல்பிற் றென்றறிவுறுப்ப அறிந்தமாத்திரையே அவ்வேடரை விட்டு நீங்கி அன்னியமின்றி அநன்னியமாந்தன்மையின் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளையணையும்.

உயிரென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது. தவத்தினிற் குருவுமாய் வளர்ந்தயர்ந்தனையென வுணர்த்த விட்டுச் செல்லுமென இயையும். குருவுமென்ற உம்மை உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்தியதூஉமன்றியென இறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம். அன்னியமின்மை அத்துவிதம். அஃதாவது சேறலைப் பயப்பித்ததாய் ஆண்டுளதாகியவினைபு. அரனென்றது சுட்டுப் பெயர்படநின்றது.

வெண்கொற்றக்குடையும் நவமணிமுடியுஞ் சிங்காதனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம்; அதுபோலப் பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாமியல்பாகிய ஒருபெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பானறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ் சுடர்முடியும், அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று எவற்றினையுஞ் செலுத்துமியல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும், பிறரொருவர்க்கின்றித் தனக்கேயுரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களையரித்தலான் அரனென்னுந் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுதுந் தனதேயாகக் கொண்டநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொருமையும்பற்றி ஆன்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ்செல்வமுழுதையும் ஆறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்துதலும் விதிவிலக்கையிழப்பித்து இழிதொழிலினிற்பித்தலுமாகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேடராகவும் உருவகஞ்செய்தார். ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவெனவே ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலும் அநுவாதமுகத்தாற் பெற்றாம். இதனுள், தவத்தினிலுணர்த்தவென்றது ஓரதிகரணம்; தம்முதல் குருவுமாயென்றது ஓரதிகரணம்; ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவென்றது ஓரதிகரணம்; விட்டன்னியமின்மையி னரன்கழல் செலுமேயென்றது ஓரதிகரணம்; ஆக நான்கதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.



## முதலதிகரணம்

**ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழுமென்றது.**

மே—மேற்கூறிப் போந்த சாதகராற் செய்யப்படுஞ் சாதனமும் அது வருவாயும் வேறு வேறாகக்கூறுஞ் சமயத்தாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற்கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. மேற்கூறிப் போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கென்பார் இவ்வான்மாக்களுக்கென்றார். படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற் செய்த தவந்தானே அமையாதென்ப துணர்த்துதற்கு முற்செய் தவமென விசேடித்தார். ஈண்டு ஞானமென்றது குரவனுணர்த்திய வாறு சிவஞானங் கண்ணாகக்கொண்டு அறிவதாகிய சாதனவறிவின் மேற்று. நிகழ்தல் ஐயந்திரிபின்றி விளங்குதல்.

மேற் சரியை கிரியாயோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது மோக்ஷத்தைக்கொடா வாகலான்.

ஏ—தவங்களே சாதனமாதலமையும் ஞானமெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. ஈண்டுத் தவமெனப்பட்டன பிறவல்லவென்பார் சரியைகிரியாயோகங்களையெனக் கிளந்துரைத்தார். கிரியாயோகங்களென்னும் உம்மைத்தொகை வடநூன் முடிபு. கிரியாயோகமிரண்டற்குந் தீக்கையொன்றென்பதுதோன்ற அவ்விரண்டனையுந் தொகுத்தோதிச் சரியையைத் தமிழுக்குரிய வீற்றான் வேறு வைத்தார். ஆளுடையபிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞானநிகழ்ந்தவாறென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழியென ஈண்டும் வலியுறுத்தார். மேலாகிய உண்மைச்சரியை கிரியாயோகங்களை யெனினுமமையும். காட்டிக் கொடுக்குமெனற்பாலதனை எதிர்மறைமுகத்தாற்கூறினார். ஞானத்தையின்றியமையாமை யுணர்த்துதற்கு, சரியை கிரியா யோகங்களைச் செய்துழியென்றது உபலக்கணமாகலின் தீக்கை பெற்றுழி அதுவும் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாதெனக்கொள்க. அவையெல்லாம் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாமையை வலியுறுத்துவார் நன்னெறியாகியவென ஞானத்தை

விசேடித்தார். நன்மையெனப்படுவன வெல்லாவற்றினுஞ் சிறந்த நன்மையாவது வீடுபேறென்பது. அதனைத் தலைப்படுதற் கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறி யெனப்பட்டது. வீட்டிற்கு நெறியென அவ்வச் சமயத்தாராற் கூறப்படுவன அனைத்துந் தன்கண்ணே வந்து கூடநின்ற பெருநெறியாகலானும் அது நன்னெறி யெனப்பட்டது. நன்னெறி சன்மார்க்கமென்பன ஒருபொருட்கிளவி.

தவஞ்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

உ—மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்தார் அவற்றான் ஞானத்தைக் காணுமுறைமை எவ்வாறென்பாரை நோக்கி அஃதாமாறுணர்த்தி எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

தவம் செய்தார் - சரியை முதலியவற்றைச் செய்தோர்கள்,—என்றும் தவலோகம் சார்ந்து-அவ்வத் தவப்பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோகாதி பதங்களை ஒருதலையாக நண்ணி, ஆண்டுளவாகிய இன்பங்களை அநுபவித்து,—பற்றுப் பவம் செய்து அறுப்பார் ஆக - முன்னுடம்பு இறக்குநாள் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம்பற்றியெழுந்த அவாவினை மீள நிலத்தின்கட் பிறந்தனுபவித்து நீக்கிக்கோடற் பொருட்டு,—தவம் செய்த நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை-மீளத் தவஞ் செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றித் தவக்குறையான அவ்விடயப்பற்று முறுகாவண்ணம் அறுத்துத் தத்துவ ஞானத்தைத் தலைப்படுவாராதலை,—கற்றூர்சூழ் கண்டு சொல்லுமாம் - வீட்டு நூல்களைக் கற்றூர் சூழ்ச்சி அந்நூற் கருத்துணர்ந்து சொல்லும்.

தவந் தானகப் பிறிதொன்று தானக இவ்வுலகத்து உடம்பொடு நின்றீட்டிய வினையெல்லாம் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் போகங்களைப் பயந்தேவிடுமாகலான் அவற்றை ஒருஞான்றும் பிறழமாட்டாரென்பார் என்றுந் தவலோகஞ் சார்ந்தென்றூர். பற்றறுதற் பொருட்டு வந்துதித்தெனவே ஆண்டுப் பற்றுச் செல்லாதவழி அவ்வுலகத்து நின்றூங்கே ஞானத்தை நண்ணுவ ரென்பதூஉம் பெறுதும்



கற்றூது சொல்லுதற்றெழில் சூழ்ச்சிமே லேற்றப்பட்டது. நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலென்ற அருத்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவ ஞானத்திற் குரியால்லரென்பது பெறப்பட்டது.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையின் இன்பம்—இசைத்த
இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து.

உ—சரியை முதலிய தவங்களே தத்துவஞானத்தைக் காட்டுமென யாப்புறுத்தோதியதென்னை வேதத்துட் கூறிய வேள்வி முதலாயினவுந் தத்துவஞானத்தைக் காட்டுமென்றல் அமையுமெனப் பட்டாசாரியன்மதம்பற்றிக் கூறுவாரை நோக்கி எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இசைத்து வருவினையின் இன்பம் - ஒரு நல்வினை செய்வானெருடங்கி அறநூலையாய்வாரது உணர்வின்கண் விடயமாய் வரும்பொழுதே தம்மாற் பெறப்படுங் காமியப்பயன்களை உடன் கூறிக்கொண்டே வருகின்றனவாய வேள்வி முதலிய அறங்களின் பயனுகிய இன்பம்,—பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும் - முன்னர்ப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியான் வருமின்பத்தை யொக்கும் ஆகலான்,—இசைத்த இருவினை இறப்பு இல் தவத்தான் ஒப்பில் - ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன் விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முட் சமப்படுத்துணரப்படுவனவாகிய அறம்பாவமிரண்டுந் தம்மைப்போல் அநுபவமாத்திரையாற் கெடுதலின்றி மேன்மேன்முறுகி வளர்வனவாய சரியைமுதலிய தவங்களானே நேராகவொத்தால்,—வந்து ஞானத்தை மருவுவன் ஆம் - அத்தவமுதிர்ச்சி யுடைமையான் முன்னர்க் கூறப்படு ஞானகுருவைத் தேடிவந்து ஞானத்தைத் தலைப்படுவன்.

வேள்விமுதலாயினவெல்லாம் அழிதன்மாலையவாய காமியங்களைப் பயப்பனவன்றித் தத்துவஞானத்தைப் பயவாவென்றற்கு அவற்றை விதித்தநூல்களே சான்றென்பார், இசைத்து வருவினையென்றும், அவை ஞானத்தைப் பயவாமைமாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடை

மையின் அவற்றது கழிவே ஈண்டைக்குக் காரணமாவதென்பார்
இசைத்தவிருவினை யொப்பிலென்றுங் கூறினர். இசைத்துவருவினை
யென நூலின்கணுழில் வினைமேலேற்றப்பட்டது. மிசைத்தவிரு
வினையெனப்பாடமோதி, இருவினைகளுண் மிக்க விருவினையாகிய
பிரமக்கொலை பரிமேதவேள்வி போல்வன தம்முள் ஒருங்கே பயன்
றருவனவாய் ஒத்தகாலத்தென் றுரைப்பாருமுளர். அஃது ஈண்டைக்
குப் பயன்பாடாமையுஞ் சித்தாந்தத்துக் கேலாமையு மறிக.
இசைத்து வருவினையினின்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பானை
யொக்குமெனவே இறப்பிறவத்தான் மருவப்படு ஞானம் பசித்துண்டு
பின்னும் பசித்தலில்லாத கடவுளர்க்கு அமிழ்தவுண்டியானுய பயனை
யொக்குமென்பதூஉம் பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்தவுண்டி
நரை திரை மூப்பின்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன்
மாத்திரையேயன்றிப் பசி தீர்தலாகிய அவாந்தரப்பயனையுந் தரு
மாறு போல இறப்பிறவமுந் தத்துவஞானத்தைப் பயத்தன்மாத்
திரையே யன்றித்தத்தம் பதமுத்தியாகிய அவாந்தரப் பயனைப்பயத்த
லும் அமைவுடைத்தாமாறு கண்டுகொள்க.

## இரண்டாமதிகரணம்

இனி இவ்[illegible]ருக்குத் தமது [illegible]முதருனே குருவு
[illegible]னமாக்[illegible]
[illegible]ணர்த்து[illegible]மென்றது.

மே—மேற்கூறியவாற்றான் நிகழு ஞானத்தையுணர்த்துவார்
கலைஞானங்களை யுணர்த்துவார்போல நம்மனோரில் ஒருவராதலமையு
மெனச் சாங்கியர் நையாயிகர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்
கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ண
ழித்துரைத்து மேற்கோடலுதலிற்று.

மேற்கூறியவாற்றான் சரியை முதலிய மூன்றும் முற்றியபின்
னர் இம்முற்றுதலானே மலபரிபாகஞ் சத்திநிபாதம் நிகழ்ந்து தத்துவ
ஞானத்தின் அவாவுதலையுடைய உயிர்கட்கு இதுகாறுந் தமக்கு
முதலாய் உண்ணின் றுணர்த்திவந்த பரம்பொருளே அப்பருவமறிந்து
குருமூர்த்தமா யெழுந்தருளி வந்து அதனை யறிவுறுக்கும். எனவே,
ஏனையோர்க்கு அது கூடாதென்றவாறாயிற்று. இக்கருத்தேபற்றி
*"அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச் - சகத்தவருங் காண்
பரோ தான்" என்றார் புடைநூலாசிரியரும்.

* திருவருட்பயன், அருளுருநிலை - அ.



அவன் அன்னியமின்றிச் சைதன்னியசொரூபியாய்
நிற்றலான்.

ஏ—மாயாவொருவன் மாயாவுருவினை யேயான், ஏயுமெனின்
எம்மனோரிலொருவனும் முடியும்; ஆகலின் தமது முதல் குரு
மூர்த்தி ஆதாரமாகத் தரித்துநின் றுணர்த்துமென்றலே அமை
வுடைத்தெனப் பொதுவகையான் அதிட்டான பக்கங் கூறுவாரை
நோக்கிச் சிறப்புவகையான் ஆவேசபக்கமாமா றுணர்த்திமேற்கோளைச்
சாதித்தனுதலிற்று.

அம்முதல்வன் பாலினெய்போல மறைந்து வேறாய் நிற்றலின்
றிச் சுத்தான்ம சைதன்னியமே தனக்குச் சொரூபமாகக்கொண்டு
தயிரினெய்போல் ஆண்டு விளங்கி நிற்றலான் இவ்வான்மாக்களுக்குத்
தமது முதல்வனே குருவுமா யுணர்த்துமென மேற்கொண்டது பாலி
னெய்போல வேறாய் மறைந்து நின்று செலுத்தப்படுவனவற்றினும்
பொதுவாய்ச் செல்வதாகிய அதிட்டானபக்கங் கொள்வார்க்கு ஏனைச்
சமயகுரவருங் குரவராவான்சேறலின் அஃது ஈண்டைக்கமைவுடைத்
தன்றென்பதாம். சைதன்னியமென்றார் மாசுதீர்ந்ததென்பதுணர்த்
துதற்கு.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்(கு)
அஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

உ—ஓரோரிடங்களிற் குருவாய்வந் துணர்த்துதலின் றியுஞ்ஞான
நிகழுமாறென்னையென்பாரை நோக்கி அதனை வரைசெய்துணர்த்தி
வலியுறுத்துதனுதலிற்று.

*விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும் - அம்
முதல்வன் மூவகையான்மாக்களுள் விஞ்ஞானகலராயினார்க்குத் தன்

* விஞ்ஞானகலர் - விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயாக
லர் - பிரளயத்திற்கலையற்றவர். சகலர் - கலையோடு கூடினவர். இவை
காரணப்பெயர். விஞ்ஞானகலர் ஆணவபந்தம் ஒன்றுமேயுடையர்.
பிரளயாகலர் ஆணவம் கன்மமென்னும் இரண்டுபந்தமுமுடையர்.
சகலர் ஆணவம் கன்மம் மாயையென்னும் மூன்றுபந்தமுமுடையர்.

மையினின்றவாறே தத்துவஞானத்தை விளைவிப்பன் :—அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும் - அவ்வாறன்றிப் பிரளயாகலராயினோர்க்கு நாற்றோளும் முக்கண்ணுங் கறைமிடறு முதலிய உறுப்பிற்றாய் முத்தொழினடாத்தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தை யுபதேசித்துணர்த்துவன் :—அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் - அவிச்சையையுடைய சகலராயினோர்க்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைந்து நின்று தத்துவஞானத்தை யுணர்த்துவன்,— முன் - அவ்வேறுபாட்டை யறிவாயாக.

விளையுமென்பது ‘அரசனெடுத்தவாலயம்’ என்புழிப்போல விவ்விகுதி தொக்குநின்றது. இவ்வாறன்றி எளிதினடப்படுதனோக்கி ‘அரிசி தானே அட்டது’ என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதனோக்கி மெய்ஞ்ஞானந்தானே விளையுமென்றாரெனினுமமையும். *“உண்ணின் றறுத்தருளி’ என்றார் புடைநூலாசிரியரும்.

ஈண்டு அஞ்ஞானமென்றது அவிச்சையை யென்பது சகலர்க்கே அடையா யோதியவாற்றானறிக. அச்சகலரென்றது தவஞ்செய்தாரென மேலெடுத்துக் கொள்ளப்பட்ட சகலரென்றவாறு. அக்குருவென்றது மேற்கோளிற் கூறிப்போந்த குருவென்றவாறு. தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் எனவே, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் படர்க்கையினும் நின்றுணர்த்துமென வரைசெய்தவாறு காண்க. இவற்றுண் முன்னையவிரண்டும் நிராதாரமெனவும் பின்னையது சாதாரமெனவுங் கூறப்படும்.

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள்—நெறியில்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

**உ**—விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் ஓரியல்பா னுணர்த்தாது அவ்வாறு தன்மையினும் முன்னிலையினும் பின்னிலையினுமா

* போற்றிப்பஃறொடை.



யுணர்த்துதல் எற்றுக்கென்பாரை நோக்கிக் காரணங் கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா - உயிர்களெல்லாந் தமக்குரிய படிவழியின் வைத்து முதல்வனறிவிக்க அறியுமியல்பினவன்றி ஒன்றுபோல் அறிவிக்கவறியு மியல்பினவல்ல ஆகலான்,—குறைவு இல் சகன் சூழ்கொள்பவர்க்கு - அவ்வறிவாற் குறைபாடில்லாத சகக்கடவுளது உபதேசமொழியைக் கொண்டுணரு மியல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு,—குறைகள் முன்பின் செறியுமாம் - அவ்வறிவித்தாலறிதலாகிய குறைகள் முன்னிலையினும் பின்னிலையினு நிகழ்வனவாம்.—குறை உடைய சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு என் - குறைவில் சகனாலாகிய குறையினையுடைய உபதேசமொழி கொண்டுணரவேண்டாத விஞ்ஞானகலர்க்கு முதல்வனாற் கொள்ளப்பட்ட தன்னுண்மைமாத்திரையின் வீடுபயக்குமுணர்வுண்டென் றறிவாயாக.

குறை இன்றியமையாப் பொருள்; அது *“வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு” என்பதனுட் பரிமேலழக ருரையானுமுணர்க. பவம், சம்பவம், உண்மை என்பன ஒரு பொருட்கிளவி. வீடுபயக்கு முணர்வு வீடென்றும், சூழ்ச்சிபயக்கு முபதேச மொழி சூழென்றுங் காரணகாரியமாக உபசரிக்கப்பட்டன. கொள்பவர் கொள்ளாரென்பனவும் அவை. ஆம்வீடெனவு மியையும். வீடாமெனப் பாடமோதுவாருமுளர். மேலை வெண்பாவின் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் தானே விளையுமெனக் கூறியவற்றை ஈண்டு நெறியினறிவிக்கவன்றி யறியாவாகலான் அது முன் செறியும் பின் செறியும் பவத்தினுமெனக் காரணங் காட்டி வலியுறுத்தினார். இதற்குப் பிறரெல்லாந் தத்தமக்கு வேண்டியவாறே மேலை வெண்பாவோடு இயைபற வுரைத்தார். அல்லதூஉம் அறிவிக்கவன்றி யறியாமை உபதேசியாய் என ஆன்மாவின்றன் னியல்பு கூறும் வழிப் பெறப்பட்டதாகலின், அதனை ஈண்டும் புனருத்தியாகக் கூறவேண்டாமையின் மேலது வலியுறுத்துதற் கேற்புடைய அறிவிக்க அறிதற்கட்படும் விசேடமாத்திரையே ஈண்டெடுத்தோதினா ரென்றுணர்க.

* திருக்குறள் - ஆள்வினையுடைமை - ௨.

படிவழியின் வைத்தறிவிக்கவன்றி யறியாமை *"பந்தமும் வீடுந் தெரிபொருட் பனுவற் படிவழி சென்று சென்றேறி" என்பதனானு மறிக.

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல்—இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

**உ**—அம்முத்திறத்துள் ஈண்டைக் கெடுத்துக்கொண்ட அஞ் ஞான அச்சகலர்க்குக்குருவாதல் உபசாரமேயன்றி ஏனையபோ லுண்மையாதல் செல்லாதென்பாரை நோக்கி உண்மையாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

நல்லாய் - அறிவால் நன்மையுடைய மாணாக்கனே,—ஏந்து இழை பால் முலைப்பாலும் கண்ணீரும் இல்லா உளவாம் ஆல் - ஏந்திய விழைகளையுடையாட்குக் குழவிமாட்டுளதாகிய அருவாகிய அன்பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பி னுருவாகிய முலைப்பாலுங் கண்ணீரும் அவண்மாட்டுக் குழவியைக் காணுமுன் இல்லாவாய்ப் பின்னுளவாம் அதுபோல,—நீர் நிழல்போல் இல்லா அரு ஆகி நின்றானை ஆர் அறிவார் தானே உரு ஆகி உற்றுத்தோன் றானேல் - நீரின்கணிழல்போல் உயிர்கண்மாட்டுப் புலப்படுதலில்லாது அருவமாய் நின்ற முதல்வனை யார்தாமறிவார் அவனே குருவடிவாய் வந்து தோன்றிநின்று உணர்த்தானாயின்.

ஒருவருமில்லையென்பதாம். இன்றியமையாமையுணர்த்துவார் தோன்றானே லாரறிவாரென எதிர்மறை முகத்தாற் கூறினார். பொருளுக்கோதியதனை உவமையினுங் கூட்டி ஏற்குமாறுரைக்க. முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்குமென்பது †"சுரந்த திரு முலைக்கே துய்யதிரு ஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச்சொல் லச்—சுரந்த—தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்த வாறு." என்பதனானும், ‡"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூசல் தரும்." என்பத

* கருவூர்த்தேவர் திருவிசைப்பா, திருவிடைமருதூர். ரு.
† திருக்களிற்றுப்படியார். ருச.
‡ திருக்குறள், அன்புடைமை. க.



னானுமறிக. அவ்விரண்டும் அன்பின் வடிவே பிறவல்ல வென்பது அன்பு நிகழ்தற்குரிய காரணமுள்வழி வெளிப்பட்டு அஃதில்வழி வெளிப்படாத ஒற்றுமை நோக்கிக் கண்டுகொள்க. இவ்வொற்றுமை யுணர்த்துவார் இல்லாவாயுளவா மென்றார்.

நீர் அகத்தியங்கு முயிர்கட்கு இடங்கொடுத்தலுண்மையான் நீரின்கண் வெளியுண்டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழலுண்டென்பதூஉம், பெறப்பட்டன. அந்நிழல், வேறுநில்லாது நீரோடு விரவி நிற்றலின் நீர்போற் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதன்னியமும் யானென்னுமுணர்விற்கு விடயமாய்ப் புலப் படும் ஆன்ம சைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன் றென்பார் நீர் நிழல்போலில்லா வருவாகி நின்றானை யென்றார்.

## மூன்றாமதிகரணம்

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணராவென்றது.

**மே**—விடயஞானத்தை விளக்கும் ஐம்பொறிகளே தத்துவ ஞானத்தை விளக்குதற்குமமையும் தம்முதல் குருவுமாதல் வேண்டா வெனச் சிவசங்கிராந்தவாத சைவர் மதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இவ்வாருரையாக்கால் இனியென்பதனா லுணர்த்தப்படு மேலையதிகரணத்தோடுளதாகிய இயைபு பெறப் படாமையறிக.

அவை தாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

**ஏ**—அறிவை விளக்குங் கருவியான் மயக்க நிகழுமாறியாங்ஙன மென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

படிகத்தின் வைத்த பலவேறுவகைப்பட்ட நிறங்கள் அப்படிக வொளியைக் கீழ்ப்படுத்துத் தத்தமியல்பினையே விளக்கி நிற்குமாறு போல், அவ்வைம்பொறிகடாம் ஆன்ம சொரூபத்தைக் கீழ்ப்படுத்துத் தம்மாற் காட்டப்பட்ட தத்தம் விடயமாத்திரையே அவ்வான்மாவுக் குக் காட்டி நிற்பனவாகலான் இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வு களான் மயங்கித் தம்மை யுணராவென மேற்கொண்டது.

விடயங்களுள்ளும் அவ்வவ்விடயமாத்திரையே அவ்வவ்விந்திரியங் காட்ட வல்லு மென்பார் காட்டிற்றையென ஒன்றறிசொல்லாற் கூறினர்.

பன்னிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

உ—அங்ஙனங் காட்டிற்றையே காட்டிநிற்குமாயின், அவ்விந்திரியங்கள் உள்வழித் தம்முதல் குருவமாயுணர்த்தினும் உணர்தல் செல்லாதுபோலு மென்பாரைநோக்கி உணர்தற்குபாயங் கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

பல் நிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நினைந்து - தன்னாற் சாரப்பட்ட பன்னிறங்களினியல்பே தன்மாட்டுக் காட்டிநிற்கும் பொதுவியல்புடைய படிகம்போலத் தன்னாற் சாரப்பட்ட இந்திரியங்களினியல்பையே சார்ந்ததன்வண்ணமாய்த் தன்மாட்டு விளக்கிநிற்குந் தனது பொதுவியல்பை முன்னர்ச் சிந்தித்தறிந்து கொண்டு பின்பு,—பல் நிறத்துப் பொய்ப்புலனை வேறு உணர்ந்து - அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென்றறியுமாறு போலப் பலவகையியல்புடைய பொதுவியல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறெனத் தெளிந்து,—பொய் பொய்யா மெய் கண்டான் - அவற்றானுய அப்பொதுவியல்பு பொய்யாயொழியுமாறு தனது சிறப்பியல்பை யுணர்ந்தானுயின்,—வேறு மெய்ப்பொருட்குத் தைவம் ஆம் - அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேருகிய சிவசத்தினதியல்பு தன்மாட்டு விளங்கச் செய்யுமாகலின் அச்சிவசத்துக் கடிமையாம்.

ஈண்டுப் பொய் மெய்யெனப்பட்டன அப்பொருளவாதல் மேலே காட்டினும். தைவமென்பது தேவனதுடைமை யென்னும் பொருட்டாய வடமொழிப்பகுபதம். இதனானே கருவிகளுள்வழிக் காட்டிற்றைக் காட்டி நிற்றலின் அறிதல் செல்லாது, அவை நீங்கியவழிக் கேவலமாய் முடியுமாகலிற் றன்னுண்மை யறியுமாறியாங்ஙன மென்னுங் கடாவை யாசங்கித்து அவையுள்வழியே தன்னுண்மை யறிதற்குபாயங்கூறி இதுபற்றி அவை காட்டிற்றைக் காட்டி நிற்றற்



கிழுக்கில்லையென வலியுறுத்த வாறுமென்க. மெய்ப்பொருட்குத் தைவமாமென்றதனால் வருகின்ற அதிகாரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

## நான்காமதிகரணம்

**இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையுமென்றது.**

**மே**—பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா மெய் கண்டார்க்கு அதுவேயமையும், கருவிகள் நீங்கியவழிச் செய்யக் கடவதொரு முயற்சி கூடாமையின் ஆண்டு மெய்ப்பொருட்குத் தைவமாதல் பெறப்படாதெனப் பேதவாதசைவர் முதலியோர் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் நான்காம் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இந்திரியத்தின் வேருயவழிக் கேவலத்தை யணைதலு முண்மையின் அதனை நீக்குதற்பொருட்டு வேருகவென்றொழியாது வேருவான் காணவென்றார்; காண்டலே அதற்கமையுமென்றலின்.

**ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யாந்துணையான்.**

**ஏ**—அவ்வாறு காண்டலே சீபாதத்தை யணைதற்குச் சாலுமென்பது யாங்ஙனமென்பாரை நோக்கி உவமையின் வைத்துக்காட்டி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

ஒருவன் ஏறியிருந் தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல ஆண்டுத்தாரகமாவது நிலனேயன்றிப் பிறிதில்லையென்னும் ஒப்புமையான், இனி யிவ்வான்மாத் தன்னை யிந்திரியத்தின் வேருவான் காணவே, தமது முதல் சீபாதத்தையணையுமென மேற்கொண்டது. வியாபகப்பொருட்குக் காட்சிவிசேடமே நீக்கமாகலின் அறுதல் அதற்கு உவமையாயிற்று.

**சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்**
**சிறைசெய் புலனுணர்வில் தீர்ந்து—சிறையிட்(டு)**
**அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல் மீளா(து)**
**உலைவில்அரன் பாதத்தை உற்று.**

**உ—கருவிகணீங்கினவழி வேறு நில்லாது சிவத்தைத் தலைப்படுமாயின் அவ்வுயிர்க்குங் கருவிகணீங்கிக் கேவலத்தைத் தலைப்பட்ட**

உயிர்க்குப்போல மீட்சியுண்டுபோலுமென்பாரை நோக்கி அஃதின்று மாறுகூறி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம் - ஒருவன் அணையையுயர்த்துக் கட்டித் தடைசெய்ய ஆண்டுத் தடையுண்டு தேங்கி நின்ற ஆற்றுநீர்போலக் கருவிகளாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதன்கண் ஏகதேசமாயடங்கித் தடையுண்டு நின்றவுயிர்,—சிறைவிட்டு அலைகடலில் சென்று அடங்கும் ஆறு போல் - அவ்வணைமுறிந்து தடை தீர்ந்தவழி இடையீடின்றிக் கடலின்கண் முடுகிச் சென்று அந்நீரேயாய் அதனுளடங்கி மறித்து வாராத ஆற்றுநீர்போல,—சிறைசெய் புலன் உணர்வில் தீர்ந்து - கருவிகளாகிய பாசஞானத் தடையினின்று நீங்கிய வழி,—உலைவுஇல் ஆரன் பாதத்தைஉற்று மீளாது - தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அதன்கணடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது.

சிறைசெய்யநின்ற செழும்புனலின் உள்ளம் என்றது தொகையுவமம். இன் உவமவுருபு. தேக்கத்தின் மிகுதி புணர்த்துவார் செழும்புனலென்றார். மலசத்திக்குக் கேடுண்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர்க்குக் கருவிகளின் மீட்சி கூடும்; சிவசத்திக்கு அஃதின்மையின் அதனைத் தலைப்பட்டவுயிர் அவ்வாறு மீளுதற்கோரியைபில்லையென்பார் உலைவிலரன்பாதமென விசேடித்தார். மீளாதென்னும் பொருள்வினை உவமையினும், அடங்குமென்னும் உவமவினை பொருளினுஞ் சென்றியைந்தன.

எவ்வுருவும் தானென்னின் எய்துவா ரில்லைதாள்
இவ்வுருவின் வேறேல் இறையல்லன்—எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணஅக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

உ—மீளாதென்று விடுத்தல்வேண்டாம் எல்லாஞ் சிவமாகக் கண்டார்க்கு மீண்டாலென் மீளாக்காலென்னென்னுஞ் சிவாத்துவிதசைவரை நோக்கி அது விடையாதற்கேலாமை கூறி மறித்தும் மீளாமையை வலியுறுத்துதனுதலிற்று.

எவ்வுருவும் தான் என்னின் தாள் எய்துவார் இல்லை - உயிருணர்வேயன்றிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின் விசேடமின்மை



யாற் புலன்வழி ஒழுகுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையின் ஒருவரும் அதனை எய்துவாரில்லையாய் முடிந்து *"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும்,—இவ்வுருவின் வேறேல் இறையல்லன் - அதுபற்றி முதல்வன் புலனுணர்வோடியையின்றி அதனின் வேறாய் நிற்பனென்னின், 'அப்புலனுணர்விற்கு அவனலாகற்பால தொன்றின்மையின் அவன் ஆண்டைக்கிறைவனல்லனெனப்பட்டு முதன்மைக்கிழுக்காய் முடியும் மற்றென்னையோ அதனியல்பென்னின்,—எவ்வுருவும் - உயிருணர்வுபோலப் புலனுணர்வுங் கலப்பினாற் சிவமேயாமாயினும் இரண்டுந் தம்முளொப்பனவல்ல, அவயவங்கள் கண்போலக் காண - உயிர் ஐம்பொறிகளினும் ஒப்ப நிற்பினும் அவற்றுண் மெய் வாய் மூக்குச் செவி நான்குங் கண்ணிந்திரியம் ஒளியான் அவ்வான்மபோதத்தோடு விரவிச் சேய்மைக் கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியுமாறுபோல வியாபித்தறிய மாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை நின்றாங்குநின்றியைந்தறிதற்றன்மையவேயாம்.—அக்கழல் அக்கண் இல்லார் கண்பேறே காண் - அக்கண்ணினது வெற்றிப்பாட்டைக் கண்ணொளி பிறந்தாரது கண்பேற்றின்கட் கண்டறிவாயாக.

கழலணிவார்க்கு உளதாகிய வெற்றிப்பாட்டைக் கழலென்றுபசரித்தார். கழல் காலணிமணிவடம். ஈண்டு வெற்றியாவது ஏனைநான்கிந்திரியங்களையு நோக்கி மேம்படுதல். கண்போலவயவங்கள் காணவக்கண்ணில்லார் கண்பேறே காணக் கழலென்பது முதல்வன் இரண்டினுமொப்ப விரவிநிற்பினும் உயிருணர்வுபோலப் புலனுணர்வு வியாபகவிளக்கமாதலின்றி ஏகதேசவிளக்கமாம். உயிருணர்விற்கு உளதாகிய அம்மேம்பாடு அவ்வியாபகவுணர்வையிழந்த பசுத்துவமுடையார் மாட்டறியப்படாதாயினும் அவரது பசுத்துவநீங்கிய சிவப்பேற்றின்கணறியப்படுமென்பது தோன்ற நின்றமையின் இஃதொட்டென்னு மலங்காரம்.

சிவமாய வழியும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாவதன்றி உயிருணர்வுபோல வியாபக விளக்கமாதலில்லையெனவே, அதன்கண் மீளுதலிழுக்கென்பது பெறப்பட்டது. இதற்குப் பிறரெல்லாம் இயைபின்றியுரைத்தார்.

---

* சிவஞானசித்தியார், பாஞ்சராத்திரி மதமறுதலை. ௨௫.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தரசிவனை
ஐம்பொறியை விட்டங் கணை சகலன்—ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கு நினைந்து.

உ—சிறைவிட்டவழி அலைகடலிற்சென் றடங்குதலே யன்றி "*"ஆற்றா லலைகடற்கே பாய்ந்த நீர் அவ்வாற்றான் மறித்"தலு முண்மையின் அதுபோல அரன் பாதத்தை யுற்றவுயிர்க்கு ஒரோ வழி மீட்சியுமுண் டென்பது பெறப்படுதலான் அவ்வழி மீளாமை செல்லாதென்பாரை நோக்கி அம்மீட்சிக்குக் காரணமிது வென்பதூஉம், அதனை நீக்குதற்குபாயமுங் கூறி வலியுறுத்துதனுதலிற்று.

ஐம்பொறியின் அல்லை எனும் அந்த தர - ஐம்பொறிகள்போல ஏகதேச விளக்கமுடையா யல்லை யென்றறிவுறுக்கப்படுஞ் சித்தாந்த மகா வாக்கியத்தைப் பெற்றுடைய மாணவகனே!—அங்கு ஐம் பொறியை விட்டுச் சிவனை அணை சகலன் ஐம்பொறியின் நீங்கான் - சிறைவிட் டலைகடலிற் சென்றடங்கு மாறுபோலென மேற் கூறிய வாறே ஐம்பொறிகளாலாய புலனுணர்விற் றீர்ந்து சிவன் திருவடியை யுற்ற சகலன் அவ்வைம்பொறிகளான் மீளவதனை நீங்குவானல்லன்,-- நீர்ப்பாசிபோல் நீங்கு மல கன்மம் வரின் நீங்கானை நினைந்து நீங்கும் - கல்லெறியும் வழி நீங்கிய நீர்ப்பாசி அது விடும் வழிப் பாக்குமாறு போல அவ்வணையின்க ணீங்கிய மலகன்ம மாயைகள் வாசனைவயத்தா னிகழுமயர்ச்சி பற்றி வந்து கூடுமாயின் அதுபற்றிப் பொறி வழி மீளாமல் அவ்வழியுந் தன்னைவிட்டு நீங்காத முதல்வனை முன்னர்க் கூறப்படு முபாயங்களினின்று சிந்தித்து அவற்றை நீக்கிக்கொள் ளூம்.

வரினென்றதனால், வருதல் ஒருதலையன்று வாசனையுள் வழியே யென்பது பெற்றாம். நீங்கியென்பது பாடமாயின், நீங்கினவாகிய மலகன்மமெனப் பெயராகவைத் துரைக்க. சித்தாந்தத்தை அந்த மென்றது தலைக்குறை. தரம் அதன்கண்ணதாய்ச் சிறந்த ஒரு வார்த்தை. அங்கு மேற்கூறியபடி. ஐம்பொறியைவிட் டணைதற்குரி யான் இவனென்ப துணர்த்துவார் சகலனென்றார். மேற்கூறிய மீளாமையை வலியுறுத்துவார் ஐம்பொறியி னல்லையெனு மந்தர

* திருக்களிற் [illegible]

## பதினொராந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்வியப் பிரபந்தங்கள் அடங்கியது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது. பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு.

**தனிப் பிரதி விலை அணா பதினொன்று ;**
ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஆறு.

**எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஐந்து ;**
ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று அணா பத்து.

சைவர்களாகிய உங்கள் முதற்கடமை இதை வாங்குவதே.

---

## திருமந்திரம்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகிய **திருமந்திரம்** சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஷை கழகத்தமிழாராய்ச்சிப் போாசிரியர் திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி., "கலைமகள்" இதழாசிரியக் கூட்ட உறுப்பினர் திரு. பி. என். அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.. ஆகிய மூன்று பேரறிஞர்களால் பல ஏட்டுப்பிரதிகளை ஒப்பு நோக்கிப் பதினாயிரம் பாடபேதங்கள் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளன. அரும்பதவுரை யகராதி, முதற் குறிப்பகராதி, திருமூலர் சரித்திர ஆராய்ச்சி, திருமந்திரத்திலுள்ள அதிகப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி முதலியன இந்நூலில் உள்ளன. இதுவரை இம்முறையில் இந்த நூல் அச்சிடப்படவில்லை. அழகிய கலிக்கோ கட்டிடம், 566 பக்கங்கள்.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா எட்டு.**

**பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து.** ரயில்வே பார்சல் மூலம் அனுப்பப் பார்சல் கட்டுக் கூலி, ரயில்வே ரசீதை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பத் தபாற் கூலி அணா 6.

---

## திருவாசகம் மூலமும் உரையும்

திருத்தமான சமாஜப்பதிப்பு, திருவாளர் - கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் உரை. திருவாளர்கள் - பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், அ. மு. சரவண முதலியார் ஆகிய முப்பேரறிஞர்களால் செப்பஞ் செய்யப்பட்டது. கலிக்கோ பயிண்டு. நல்ல கிளேஸ் காகிதம் ; 532 பக்கங் கொண்ட அரிய நூல். விலை ரூபா மூன்று.

**இன்றுமுதல் ஒரு மாதம்வரை சமாஜ அங்கத்தினருக்கு மாத்திரம் விலை ரூபா இரண்டு.**

ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 8.

சிலபிரதிகளே உள்ளன. உடனே முந்துக

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 3

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1136 பக்கங் கொண்டது; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர்தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935 வருடத்திய சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—3—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.